உ

# ஆத்மீக ஞானம்

அறம் : 1 க உண்மையே கடவுள் சிந்தனை : 4 ச

" சென்று சென்று அணுவாய்
தேய்ந்து தேய்ந்து ஒன்றாகும் — சிவனே
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை".

— மாணிக்கவாசகர்

சாதி, சமய, இன வேற்றுமை அற்ற
மாதாந்த ஆத்ம சிந்தனைச் சஞ்சிகை

01 - 04 - 1992

## நிறுவனரின் சிந்தனைத் தொகுப்புகளும்
## பிற ஆக்கங்களும்

பொது நிறுவனங்களுக்கான

விநாயகர் தருமநிதிய இலவச வெளியீடு

— சிக்கனம் - சமத்துவம் - உடல்உழைப்பு —

உ

# முகவுரை

வடமராட்சி சாரணர் சங்கத்திற்கு, விநாயகர் தரும நிதியம் ''சாரணர்—ஆசிரிய கைநூல்'' என்னும் இலவச வெளியீட்டை பதிப்பித்து வழங்கியதின் காரணமாக; இவ் முகவுரை இதில் இடம்பெறுகின்றது.

சாரணியத்தின் தந்தை றொபட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் அவர்களுடைய போதனைகள், நுட்பங்கள் அடங்கிய நூல் ஒன்று தமிழ் மொழியில் வெளியிடப்படுவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

ஒருவன் தன்னை மறந்து பிறரை எண்ணி நேசித்து வாழ்வதில் எல்லாச் சமயங்களும் ஒருங்குபடுகின்றன. சாரணர் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர். எல்லோருக்கும் நண்பர். சகலருக்கும் உடன்பிறந்தவர். விநயம் உள்ளவர். கீழ்ப்படிவு அவர்களுடன் கூடப்பிறந்தது. நாட்டிற்கு உழைத்தல். பிறர் நலம் வேண்டுதல். இமைப்பொழுதும் சோராதிருத்தல். நன்னடத்தை, கைத்தொழில், உடல் நலம் பேணல், முதலுதவி என்பன சாரணர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளும் அறிவுறுத்தல்களுமாகும்.

இப் பண்புகள் உள்ள மாணவ சமுதாயம் ஒன்றினை எமது நாட்டில் வளர்த்தெடுப்பதற்கு இந்நூல் பேருதவியாக அமையும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

இந்நூல் வெளிவர இன் முகத்துடன் பொருளுதவி செய்துள்ள விநாயகர் தரும நிதிய நிறுவனர் திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை அவர்கள் ஒரு சந்திரப் பிழம்பு. அசுர வேகத்தில் ஆசிரிய மாணவ சமுதாயத்துக்கும் கல்வி உலகுக்கும் அவர் ஆற்றிவரும் பணி அளவிடமுடியாதது. அவருக்கு கடவுள் இன்னருள் வெள்ளமாகக் கிடைக்க வேண்டுவது எங்கள் கடமையும் மகிழ்ச்சிக்குரிய பணியும் நன்றிக் கடனுமாகும்.

காலமறிந்து இந் நூல் வெளிவருவதன் மூலம் மாணவ-ஆசிரிய உலகம் பயன்பெறுவதாக. இவ்வாறான நூல் வெளியீட்டின் மூலம் மக்கட் தொண்டின் ஆழத்திற்குச் சென்றுள்ள விநாயகர் தரும நிதிய நிறுவனர் திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை அவர்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*கோட்டக்கல்விப் பணிமனை,* | திரு. த. செல்லத்துரை
*வடமராட்சி, பருத்தித்துறை.* | *பிரதிக் கல்விப் பணிப்பாளர்*





உ

சிவமயம்

# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள் சக்தியை எந்நேரமும் உதவிக்கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும் எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக்கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகிறோம்.

விநாயகர் தரும நிதியம் **நிறுவனர்**

## உள்ளே ..............

- ★ அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலர் !
- ★ மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி !
- ★ மதம், சமயம் உணர்த்திய உண்மைகள் என்ன ?
- ★ வெளிவேசங்களான பிரார்த்தனை வெளிச்சம்
- ★ தருமம் தலை காக்கும் [தந்ததில்லை
- ★ நிறுவனரின் வாழ்க்கை வரலாறு (தொடர்.........)
- ★ தீட்டிய அரிசி, கோதுமை மாப் பண்டங்கள் நோயாளர் சமூகத்தின் தாய் தந்தையர்கள்
- ★ திருநாவுக்கரசு நாயனார் சரித்திர விளக்கம்
- ★ நெறிதவறாத அறத்தின் மேன்மை.........
- ★ .........கருங்கல்லும் கதை பேசியது !

உ—

விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு,
13-03-92

## நிர்வாகசபைக் கூட்டத் தீர்மானம்

புலோலி மேற்கு - தம்பசிட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினராலும், 'வியாபாரிமூலை க்லைமணி சனசமூக நிலையத்தினராலும் நிதிய நிறுவனர் ஆ. சி. முருகுப்பிள்ளை அவர்களின் அறநெறிப் பணிகளையும், ஆத்மீகப் பணிகளையும் பாராட்டிக் கௌரவித்து முறையே,

1. '' அறநெறிக் காவலர் ''
2. '' தரும வித்தியா தீபம் ''

என்னும் சிறப்பு நாமங்கள் (பட்டம்) சூட்டப்பெற்றன. மேற்படி நிதியத்தில் 13-03-92 வெள்ளி மாலை 6-30 மணியளவில் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் - பட்டமளிப்பை வரவேற்று நன்றி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியதோடு, இச் சிறப்பு நாமங்களை எதிர்காலத்தில் நிறுவனரின் பெயரோடு இணைத்துப் பாவிக்க வேண்டும் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பெற்றது.

விநாயகர் தரும நிதிய
தருமகர்த்தா சபை

---

உ—

பரமானந்த ஆச்சிரமம்
வதிரி, கரவெட்டி.
13-03-1992

எமது ஆச்சிரமத்தை நடாத்துவதற்கு சில பல கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளதால் தற்காலிகமாக இம்மாத (தமிழ் பங்குனி மாதம்) நடைமுறைச் செலவுகளை யாவற்றையும் புலோலி மேற்கு பருத்தித்துறை விநாயகர் தரும நிதிய நிறுவனர் அவர்கள் ஏற்றுள்ளார். அவர்களுக்கு பரமானந்த ஆச்சிரமத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுவாமி பரமானந்தர்**



உ—

## அண்ணல் இருப்பிடம்

## ஆரும் அறிகிலார்!

திருமூலர் திருமந்திரத்திலுள்ள ஓர் பாடலை ஆராய முற்படுகிறோம்.

'' அண்ணல் இருப்பிடம் யாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்களுக்கு
அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன் இவனாகுமே.''

இந்த இடத்திலே நாம் எமது சிந்தனையை வளர விடுகிறோம். அண்ணல் என்று சொல்வது யாரை என்று ஆராய்வதும் எமது முதற் கடமை. இங்கே அண்ணல் என்பது எவருக்கும் எட்டமுடியாத ஒரு பரம்பொருளைக் குறிப்பதாகவே கருதுகிறோம். இங்கே குறிப்பிடும் இவ்வாறான ஒரு பரம்பொருள் அமையும் இடத்தை எந்த தராதரம் உள்ளவராலும் அறியவே முடியாது. சமயவாதிகளாய் இருந்தாலென்ன, அரசியல் வாதியாய் இருந்தாலென்ன தவவலிமை மிக்க ஞானியாய் இருந்தாலென்ன கடமையே கடவுளெனப் போற்றும் ஓர் ஆன்மாவாக இருந்தால் என்ன, ஐந்து பூத விகிதாசாரத்தில் மேம்பட்ட வலிமையுள்ள ஓர் ஆன்மாவாய் இருந்தாலென்ன எவராலுமே இறைவன் என்பவரையும் அவர் இருக்குமிடத்தையும் அறிய முடியாதென்பது உண்மையில் உண்மையே.

அடுத்ததாக இப்பாட்டின் இரண்டாவது வரியை எமது சிந்தனையில் வளரவிட்டு உண்மையைக் காணுவதற்கு உள்ளத்தைக் குடைகிறோம். இவ்வரியில் இறைவனை ஓர் சிறிதளவு ஆய்வு செய்ய முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. அப்படியாக மனதைக் குடைந்து உண்மையைக் கண்டறிய எத்தனிப்பவர்களுக்கு இறைவன் எள்ளளவும் அழிவின்றி உள்ளே காணலாம் என வரையறுத்துக் கூறுகின்றார்.

இதிலும் நாம் எமது சிந்தனையை வளரவிடுகிறோம். அழிவில்லாத இறைவனையே நாம காணவேண்டும் என்பது இவரது கருத்தாக அமைந்துள்ளது. இவர் குறிப்பிடும் அழிவின்றி உள்ளேயிருக்கும் இறைவனைக் காணும் பாக்கியம் எந்த ஒரு ஆன்மாவுக்குக் கிடைக்குமாக இருந்தாலும் அந்த ஆன்மா இறைவனுக்குரிய ஐந்துபூத விகிதாசாரம்

கொண்ட ஓர் இறைவனாகவே இருக்கமுடியும், இப்படியான சம்பவங்கள் சம்பவித்து இறைவனை அழிவின்றிக் கண்டவிடத்தில் உண்மைப் பொருளான இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுவார்கள். இந்த ஓர் பாட்டின் மூலமே ஏராளமான கருத்துக்களைக் கூறமுடியும் என்பதை உணர்ந்து இவரது ஒரு பாடலை மட்டும் எடுத்து எமது சிந்தனையிலிட்டு ஆராய்ந்துள்ளோம். உண்மைப் பொருளின் இருப்பிடத்தை உள்ளத்தைக் குடைந்து குடைந்து ஆராய்பவர்களுக்கு அவர்களது கடவமபுணர்வின் வலிமை காரணமாக (கடும் உடலுழைப்பு) ஐந்துபூத விகிதாசாரத்தில் ஞான ஒளிப்பூத விகிதாசாரத்தின் ஆட்சித் திறமை மேலோங்கி ஞான ஒளி விகிதாசாரம் பெருகி அவர்கள் உண்மைப் பொருளுடன் ( இறைவன் ) இரண்டறக் கலப்பதென்பது உண்மையில் உண்மையே. இதற்கு வேறு எவ்வித சந்தேகமும் தேவையில்லை.

## நன்றி நவிலல்

நடுவுத்துருத்தி, நல்லூர்ச்சந்தை 'நாமஞ் சொல்லுவோம்', என்ற நூலை அன்பளிப்பாக அனுப்பியுள்ளார்கள். அவர்களுக்கு எம் நிதியம் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறும்.

மீசாலை சதா நடராசா அவர்கள் '**உவமைத் தொடர்கள்**', எனும் நூலை அன்பளிப்பாக அனுப்பியுள்ளார். அவருக்கு எம் நிதியம் சார்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

துர்க்காபுரம் மகளிர் இல்லம் "**10ஆம் ஆண்டுச் சிறப்பு மலரை**" அன்பளிப்பாக அனுப்பியுள்ளார்கள். அவர்களுக்கும் எம் நிதியம் சார்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

ஏழாலை களபாவோடை வசந்த நாகபூசணி கும்பாபிஷேக மலர் கிடைக்கப் பெற்றோம். அவர்களுக்கும் எம் நிதியத்தின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

மில்க்வைற் தொழிற்சாலை அதிபர் **திரு. க. கனகராசா அவர்கள்** சில பல வெளியீடுகளை அன்பளிப்பாக எமக்கு அனுப்பியுள்ளார். அவர்களுக்கும் எம் நிதியத்தின் சார்பாக நன்றியறிதலைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

உண்மையை விளக்கும் நூல்களை உருவாக்கினால் நாடு நலம்பெறுமென உறுதியுடன் நம்புகிறோம்.



உ

# மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி

இன்று எங்கு பார்த்தாலும் ஊழல்களும், நேரத்திற்கொரு வார்த்தையும் கொண்ட நாடாக மாறி வருவதைக் காணுகிறோம். முன்னைய காலத்திலே செங்கோலாட்சி நடைபெற்று வந்த காலங்களில் மன்னனது செங்கோலாட்சிக்கு ஏற்ப மக்களும் சத்தியத்தைக் கடவுளாய்ப் போற்றி நடந்துள்ளார்கள். அக்காலத்தில மன்னனது செங்கோலாட்சி காரணமாக ஐந்துபூத சஞ்சாரங்களும் அவற்றிற்கேற்ப மனிதரில் உருவாகி நோய், பிணிகள், பிரச்சனைகள் இல்லாமல் சமதர்ம நோக்கு போன்ற பல அறநெறிப் பணிகள் வளர்ந்த காரணத்தினால் மாதம் மும்மாரி பெய்தது. பஞ்சம் இருக்கவில்லை. இக் காரணங்களினால் எவரிடமும் பொறாமை, அகங்காரம் போன்ற தீய செயல்கள் இருக்கவில்லை. இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் அவர்களது பஞ்சபூதச் சேர்க்கையிலுள்ள அறநெறிச் சிந்தனையேயாகும். காலம் செல்லச்செல்ல செங்கோல் செலுத்திய அரசன் முதற்கொண்டு சகல மனிதர்களிடமும் தான் தான் மேலோங்க வேண்டும் என்ற பேராசை, பொறாமை எண்ணங்கள் ஏற்பட்டு பொய் சொல்ல முற்பட்டதும் அவர்களது ஐந்துபூத விகிதாசாரத்தில் ஒளிப்பற்றுக் குறைந்து நீர்ப்பற்றுக் கூடியது. இந் நீர்ப்பற்றுக் கூடியதும் அவர்களது பொய் வார்த்தைகளிலுள்ள அசுத்தக் கிருமிகள் பெருகி அவ்வசுத்தக் கிருமிகளை ஒழிக்க வேண்டிய ஒளிப்பூதம் குறைந்த தன்மையினால் தீராத நோய்களையும், மனக்கிலேசத்தையும் உருவாக்கியுள்ளதைக் காணுகிறோம்.

ஆகவே தவறான வழிகளில் செயற்படும் அரச பரம்பரை காரணமாக மக்களும் அவ்வாறே நடந்து துன்பங்களை அநுபவிக்கிறார்கள். அரச வம்சத்தினரும் அவ்வாறே துன்பத்திற்கு ஆளாகி துர்மரணங்களையும், எதிர்பாராத துன்பங்களையும் அநுபவித்துக் கொண்டிருப்பதைக் கண்ணாரக் காணுகிறோம். ஆகவே நாட்டுப் பிரச்சனைகள் குறைந்து நாடு வளம்பெற வேண்டுமானால் அரசன் மக்களுக்கு சத்தியம் தவறாத நல்வழியைக் காட்டியேயாக வேண்டும்.

# மதம், சமயம் என்னும் பதங்கள் உணர்த்திய உண்மைகள் என்ன ?

சமயம் என்பதென்ன ? மதம் என்பது என்ன ? இவற்றையிட்டு சிந்தித்தாலோ, எழுத வெளிக்கிட்டாலோ ஓர் முடிவைக் காண்பதென்பது ஒரு இலகுவான காரியமல்ல. உயிரினங்கள் ஆரம்பகாலம் முதல் இன்று வரையில் எத்தனையோ விதம் விதமான உயிரினங்கள் உருவாகிக் கொண்டேயிருப்பதை எக்காலமும் கண்டு வருகிறோம். அவற்றில் ஓரறிவைக் கொண்ட தாவர வர்க்கங்களாயும், இரு விதமான அறிவைக் கொண்ட மீனின வர்க்கமாயும், மூன்று விதமான அறிவைக் கொண்ட ஊர்வனவாயும், விஷ சந்துக்களாயும் உருவாகியுள்ளதைக் கண்டு கொண்டோம். இதன் பிற்பாடு இவ்வுயிரினங்கள் ஐந்துபூத விகிதாசார மாறுதல் காரணமாக நாலறிவுள்ள பட்சி இனமாகவும், ஐந்தறிவுள்ள மிருக இனமாகவும் பரிணமித்துள்ளதைக் கண்டு கொண்டோம். இதன் பிற்பாடு ஐந்தறிவுள்ள மிருக இனத்திலிருந்து பகுத்தறிவுள்ளதான ஆறறிவுள்ள மனித இனம் தோன்றலானது. கால நிலைக்கு ஏற்பவும், பூமியின் சூழல்நிலைக் கேற்பவும் ஐந்துபூத விகிதாசார மாறுபாடிற் கேற்பவும் பலவிதமான மனித இனம் தோன்றலாயின. இவர்களின் சூழல், ஐந்துபூத விகிதாசார மாறுபாடுகள் காரணமாக வெவ்வேறு விதமான அங்க அமைப்புள்ள மனிதர்கள் உருவானதைக் காணுகிறோம். இவர்கள் பேசும் மொழிகள், ஓசைகள் என்பனவும் மிகமிக வேறுபட்ட நிலையிலுள்ளதைக் கண்டு கொண்டோம் இவ்வாறான மக்களிடையே அதிகார மோகம் காரணமாக தாம் தாம் சொல்லுவதையே சரியெனக் கடைப்பிடிக்கும் பகுத்தறிவில்லாத பலவித மனிதவர்க்கங்கள் தோன்றலாயின. இவ்வாறு வளர்ந்த மக்களிடையே எண்ணிலடங்கா சமயக் கோட்பாடுகளும், மதக் கோட்பாடுகளும் அமைந்திருந்தன. ஒரு சமயவாதி சொல்லுவதை வேறொரு சமயவாதி எதிர்ப்பதாயிருந்தால் அவரது ஆயுள் அன்றுடன் முடிவடைகின்றது.



'' சமயம் '' என்பது தருணத்திற்கேற்ற கதையையே குறித்து நிற்கின்றது. காலையில் சொல்லும் ஒரு சமயக் கோட்பாட்டை மத்தியாணம் வேறுவிதமாக அமைத்தும் சொல்லுவார்கள். மத வரலாறும் இவ்வாறே அமைந்துள்ளதைக் காணுகிறோம். மதம் என்ற சொல்லும் அது கூறுபவரை வேறொருவர் எதிர்ப்பதாயிருந்தால் அவரது ஆயுளும் அன்றுடன் முடிவடைந்து விடுகிறது. சமய வேற்றுமை, மத வேற்றுமை காரணமாக இன்று வரையில் பலியானோரின் தொகையைக் கணக்கிட முடியாது. சோக்கிரட்டீஸ் என்னும் தத்துவஞானி கூட உண்மையை மறுத்துச் சொல்லாத காரணத்தினால், அவர்கள் அருந்தக் கொடுத்த நஞ்சையே மனவிருப்பத்துடன் ஏற்று அருந்தியதாக வரலாறு கூறுகிறது. ஆனால் அவரது கொள்கையை எதிர்த்த பலரும் அவர் இறநதபின் இன்று அவரின் கொள்கையைப் போற்றி விழாவெடுப்பதைக் காணுகிறோம்.

சமய, மதக் கொள்கைகள் யாவும் உண்மைக்கு மாறுபாடாகவே அமைந்துள்ளதைக் காணுகிறோம். எமது சைவசமயக் கோட்பாட்டில் தீபாவளித் திருநாளை ஒரு புனித நாளாக வகுத்துள்ளதைக் காணுகிறோம். நரகாசுரன் என்னும் ஓர் அசுரன் பல்லாயிரம் வருடங்களாக செய்த கொடுமையினை உணர்ந்து தான் இறக்கப்போகும் ஐப்பசி மாதத் தீபாவளி நாளிலே தனது ஞாபகார்த்த காரணமாக எல்லா மக்களும் புத்தாடை புனைந்து மனதில் தீய எண்ணங்கள் அழுக்கேற வண்ணம் நீராடி தனது நாளைக் கொண்டாட வேண்டும் என்று வகுத்துச் சென்றதாக புராண வரலாறு கூறுகிறது. ஆனால் இன்றைய சமயக் கோட்பாட்டின் நடைமுறையை நன்றாய் உணர்ந்து செயற்படுத்தி வருகிறோம். எத்தனையோ சைவ சமயப் பேரவைகள் எல்லாம் கூடியும், நிர்மாணித்தும் இக் கொள்கையைக் கடைப்பிடிக்க முடிகின்றதா ? கடைப் பிடிக்க முடியாதாயின் காரணம் என்ன? தீபாவளித் திருநாளிலே தமிழ் கூறும் நல்லுலகெங்கும் வளர்த்து வரும் ஆடுகளின் விலை என்ன ? அன்றைய தீபாவளித் தினத்திலே ஓலமிட்டுக் கத்திக் கதறும் ஆடு, கோழிகளின் தொகையைக் கணக்கிட முடியுமா? இங்கு ஓர் உதாரணத்திற்காக நாம் இதைக்

கூறியுள்ளோம். இன்னும் இதைப்போல் ஏராளமான உதாரணங்கள் கூற முடியும். தீபாவளித் தினத்திலன்று ஒலமிட்ட எண்ணிலடங்காப் பிராணிகளின் வேதனையுள்ளம் எமது சமயத்தை என்றும் வளர்க்கப் போவதில்லை. ஆகவே மாணிக்கவாசகரின் ஓர் வாசகமான ''உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன் பேர் வேண்டேன், கற்றாரை யான் வேண்டேன்.............. கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே'' என்பதை இங்குள்ள ஒருசில மனிதராவது கடைப்பிடிக்க முடியுமா? [தொடரும்]

## ★ அறிவித்தல் ★

எமது ''அறத் தமிழ் ஞானம்'' பங்குனி மாத இதழில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு அறநெறி விஞ்ஞான பரீட்சைக்குரிய ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தோம். அதில் வடமாகாணத்திலுள்ள சகல கல்விக் கோட்டத்திற்கும் பாடசாலை முகவரியைத் தரும்படி கடிதம் எழுதியிருந்தோம். பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்திலிருந்து மட்டும் அப்பகுதிக்குரிய பாடசாலை முகவரிகள் கிடைக்கப் பெற்றன. வேறு எவருமே எதுவித பதிலும் தரவில்லை. இருந்தும் எல்லாக் கோட்டங்களுக்கும் நேரடியாக எமது செலவில் அனுப்பி அறநெறியைக் கற்பிப்பதற்குரிய முயற்சியை எடுத்திருந்தோம்.

மருதனாமடக் கல்விக் கோட்டப் பணிமனைக்கு இப் பிரதிகளுடன் சென்று இப் பரீட்சையை வைக்கும் முறை பற்றி விளக்கம் கூற முயற்சித்தோம். அங்கேயுள்ள அதிகாரி எம்மை வெளியில் இருக்கும்படியாகவும், தான் கூப்பிடுவதாகவும் கூறியிருந்தார். இரு மணித்தியாலங்கள் சென்ற பின்பும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் திரும்பி வந்துவிட்டோம். ஆகவே மருதனாமடக் கோட்டப் பிரிவிலுள்ள எப் பாடசாலைகளும் எமது பரீட்சையில் பங்குபற்ற முடியாதென்பதை மிகமிக மனவருத்தத்துடனும், ஆழ்ந்த கவலையுடனும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிறுவனர்
வீநாயகர் தரும நிதியம்



# வெளிவேசங்களான பிரார்த்தனை, இறைநம்பிக்கை வெளிச்சம் தந்ததில்லை!

எமது வெளியீடுகள் ஒவ்வொரு மாதமும் குறைந்தது 400 பேருக்குக் குறையாமல் தபாலில் அனுப்பி வருகிறோம். இதைப் பெற்றுக் கொண்டவர்கள் சிலரைத்தவிர மற்றையவர்கள் எதுவித பதிலும் எழுதாமல் விடுகிறார்கள். இது மிகமிகத் தவறான செயலாகும் என்பதை அன்புடன் கூற விரும்புகிறோம்.

எமக்கு வரும் எக்கடிதத்தை எடுத்தாலும் உலகம் கேவலப்பட்டுக் கொண்டே போகிறது. இவற்றைப்போக்க ஆண்டவனைப் பிராத்திக்க வேண்டும். இறை நம்பிக்கை வேண்டும் எனப் பலரும் எழுதுகிறார்கள். சொல்வதைச் செயலில் கடைப்பிடிக்கிறார்களா? ''கற்றாவின் மனம் போலக் கசிந்துருக'' வேண்டுகிறார்களா? இவை எல்லாவற்றையும் தீவிர சிந்தனையிலெடுத்து ஆராயவேண்டியது எமது கடமையென நம்புகிறோம். இன்றைக்குச் சில கிழமைகளின் முன் தென்னிலங்கையில் இருந்து பல மதகுருமார் வடபகுதிக்கு வந்து தமது செயல் வெற்றிபெற வேண்டுமெனப் பிரார்த்தித்துச் சென்றுள்ளார்கள். கொழும்பு இந்துக் கோயில்களிலும் சனாதிபதி அரசாங்கத்துக்கு வெற்றிபெறவேண்டுமென பூசை, அபிசேகங்கள் செய்ததாக பத்திரிகைகள் கூறுகின்றன. இவ்விடமுள்ள சில இடங்களிலும் இதேவிதமான பூசை, அபிசேகங்கள் செய்ததாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இவைகளை நன்றாக உற்று ஆராயும்போது இவைகளெல்லாம் வெளி வேசங்களென உண்மைப்பொருள் விளக்குகிறது.

எமது எழுத்துக்கள். சிந்தனைகள் எமது செயலில் அமைகின்றனவா என்பதை எவரும் கணித்து அது சரியாயின் அதை உணர்ந்து கடைப்பிடித்துப் பயன் அடையுமாறு அன்புடனும் பண்புடனும் வேண்டுகிறோம்.

உண்மையே கடவுள். ஒளியே அறிவு. உண்மையே கடவுள் என்பதை நம்பமுடியாதவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளத் தேவையில்லை.

கட்டுக்கட்டாக வெளியூர்த் தபால்கள் தபாற்சேவகரின் வீட்டில் கண்டுபிடிப்பு.
—முரசொலி 19-2-1992 செய்தி,

# தருமம் தலைகாக்கும் !

(தொடர்ச்சி – 4.........)

எம்மவர்களில் பலர் தன் மக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என்ற குறுகிய வட்டத்துக்குள் நின்று கொண்டு ஊற்றின் விளைவுகளை யாரும் அறிய முடியாத சந்து பொந்துகளில் முடக்குகின்றார்கள். இப்படியான முடக்கங்கள் ஒரு ஆக்க செயற்பாடுகளுக்கும் பயன்படுவதாக இல்லை. இதனால் நிரந்தரமாக ஊற்றெடுக்க வேண்டியதை தாமே அடைக்கப்பண்ணியது போன்ற காரண கர்த்தாவாகின்றனர். இத்துடன் சோம்பேறியான அடுத்த சந்ததியை உருவாக்கிய பாபத்துடன், சீரழிவான வாழ்க்கை முறைக்கும் ஆளாக்கியவர்கள் ஆகின்றார்கள்.

" அண்ணார்ந்து பார்க்கின்ற மாளிகை கட்டி
அதன் அருகினில் ஓலைக் குடிசைகட்டி
பொன்னான உலகென்று பெயரை வைத்தால் "

என்பதுபோல் 2, 3, 4, 5 என்ற தொகையில் பிள்ளைகள் வெளிநாட்டில் நிற்க, தந்தை இங்கே உயர்நிலையில் இருக்கின்றான். பக்கத்து எல்லையில் சகோதரனோ அல்லது ஒன்றுவிட்ட சகோதரன் குடும்பமோ ஓலைக் குடிசையில் அதுவும் இன்றைய நிலையில் ஒருநேர சாப்பாட்டுக்கு தத்தளித்துக் கொண்டிருக்கையில் - இவர்களுடனான உறவையே துண்டித்துக் கொள்கின்றான். அவன் நினைக்தால் ஓலைக் குடிசையில் தவழ்ந்து கொண்டிருக்கும் குடும்பத்துக்கு நடை பயிலும் வண்டியைக் கொடுத்து முன்னுக்குவரும் மார்க்கத்தைக் காட்டலாம். இன்னுமோர் விடயத்தை நோக்குமிடத்து ;

பிள்ளைகளாலோ, தன் முயற்சியினாலோ அடைந்த இன்றைய உயர் முன்னேற்றமான நிலைக்கு முன்னைய சாதாரண நிலையில் இருந்தபோது உள்ள சேவைத்தன்மை வாய்ந்த நற்குணங்கள் யாவும் இன்று அருகிப்போன மனோநிலையில் காண்கின்றோம். பிச்சையென்றோ, அகதியென்றோ வருவோருக்கு கொடுத்த தன்மையும், கிராம



அபிவிருத்தி, நாட்டு அபிவிருத்தி என்று ஈடுபட்ட தன்மையும் உயர்நிலை அடைந்தபோது ஒதுங்கி மனித ஈரத்தன்மையற்ற உலோபியாகிப் போகின்றார்கள். இது இன்றைய தமிழனின் குணாம்சமாகி விட்டது. புற நாட்டவன் எம்மினத்திற்கு ஆறுதல் கஞ்சி ஊற்ற முனைந்துகொண்டிருக்கையில்-குறைந்தபட்சம் எம் இனத்திற்கு என்னால் இயலக்கூடியளவு சேவை செய்வோம் என்ற தன்மையும் மக்கி மடிந்து போய்விட்டது.

இத்தன்மை எம்மினத்தில் பரவலாகக் காணப்பட்டாலும் குறிப்பாக, சைவவேளாளர் என்ற வர்க்கத்துக்குளும் ஒரு குழுவினர் தங்களுக்குள்ளே வட்டம் போட்டுத் தாங்கள் உயர் மரபினர் என்ற பாகுபாட்டை தங்கள் மனதில் வளர்த்தவர்களிடம்தான் அதிகமாகத் காணப்படுகிறது. உருத்திராட்சம், காவிவஸ்திரப் பரம்பரையில் வந்தவர்கள்—நாங்கள். நாம் கடவுளுக்கு சமீபமாக இருக்கிறோம் அல்லது கடவுளைக் கண்டுவிட்ட நிலையில் இருக்கிறோம். ஆகையால் அடுத்த சுரப்பினருடன் கீழ்மட்டத்திலான உறவை வைத்துக் கொண்டாலோ, அவர்களுக்கு வழிகாட்டல், உதவிகளைச் செய்தாலோ மற்றவர்கள் தங்களைத் தொட்டாலோ, உணவு அருந்துதலைப் பார்த்தாலோ தங்கள் பவித்திரம் (கடவுள் தன்மை) போய்விடும் என்ற ஆணவப் போக்கில் நடைபயின்று புறத் தொடர்புகள் அற்ற நிலையில் வாழ்கிறார்கள்.

இப்பிரபஞ்சம் இறைவனின் (உண்மைப் பொருளின்) தோற்றம். உயிரினங்கள் அனைத்தும் இறை அம்சம் என்பதை நிறையவே தெரிந்து கொண்டிருந்தும், இக்கூட்டத்தினர் இறைசக்திக்கு ஒவ்வாத மமதையின் வழியில் சென்று கொண்டிருக்கிறார்கள். இக் காரணங்களால் இவர்களது சூக்கும தேக ஆன்ம அலையில் உள்ள ஒளிப்பூத விகிதாசாரம் குறைந்து அசுர குருவுக்குரிய நீர்ப்பூதம் கூடுவதால் செயல்கள் எல்லாம் அசுரத் தன்மை, ஆணவத் தன்மையாய் மாறுபடுகின்றன. ஒரு விதத்தில் தங்கள் வட்டத்துக்குள் நின்றுகொண்டு சில நெறிவழி வாழ்வு வாழ்ந்தாலும், இறை தத்துவம் புரியாமல், உண்மைப் பொருளின் உலக சேம - ஈடேற்ற சக்தியை, அகங்காரமெனவும் சடத்தினால்

ஆக்கப்பட்ட சுயநலமெனும் கலத்தினுள் அமுக்கிவிட லாம் - அமுக்கிவிட்டோம் என்ற பகற்கனவில் வாழ்கின் றார்கள்.

'' கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. ''

நிறையவே கற்றவர்களும் இக் குறள்நெறி தவறியதால் ஐந்துபூத விகிதாசாரம் மாறுபட்டு அன்று தருமர் சொன்ன எச்சரிக்கை மீறப்பெற்று கலியுகத்தின் போக்கில் போய் ஐந்துபூத விகிதாசாரத்தில் அசுரப்பற்றைக் கூட்டி எங்க ளுக்கு எங்களுக்கென பல தெய்வங்கள், பல கோயில்கள் அமைத்து அறநெறிச் சிந்தனை மீறப்பெற்று எவ்வளவு செய்தாலும் உய்வே கிடையாது. '' நன்றி கொன்றபின் எந்த நற்றவம் புரிந்தாலும் உய்வே கிடையாது '' என கந்தபுராணம் கூறுகிறது.

— ஸ்ரீ வாணி அச்சக உரிமையாளர்.

''... ஒரு வாழ்க்கைத் தொழிலைத் தேர்ந்தெடுப்பது என்பது மிகவும் முக்கியமானது. ஏன் எனில் அது தான் அவன் மனித குலத்திற்காகப் பணியாற்றுவதில் சிறந்த வாய்ப்பைக் கொடுக்கக் கூடியதாகும். ''

* * * *

''... ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் ஒரு நிலைப்பாட்டைத் தேர்ந்தெடுத்த அந்த நிலை அவன் மனித குலத்திற்கு சிறந்த முறையில் சேவை செய் தற்கு இடமளிக்குமானால் அவர், நான் என்னும் தற் பெருமையுடன் கூடிய குறுகிய சொந்தசுகம் மகிழ்ச் சியைப்பற்றி அதிகமாக உணரமாட்டார். அதற்குப் பதி லாக அவருடைய மகிழ்ச்சி கோடிக்கணக்கான மக்க ளுக்குச் சொந்தமாக இருக்கும். ''

— கார்ல் மார்க்ஸ் —



# ( நிறுவனரின் வாழ்க்கை வரலாறு )

## அங்கம் - 1

எமது வெளியீடுகளையும், பணிகளையும் பார்வை யிட்ட பலரும் உங்கள் வாழ்க்கை ஏன் இவ்வாறு அமைய வேண்டுமெனக் கேட்கிறார்கள். மற்றவர்களுக்கில்லாத சிந் தனை உருவாவதற்குரிய காரணத்தை அறிய விரும்புகி றார்கள். பலரும் இவ்விதமாகக் கேட்டுக் கொண்டதற் கிணங்க எமது கடமையுணர்வு எமது வரலாற்றை எழுதும் படி தூண்டுகிறது. ஆகவே பிறந்த நாள் முதல் இன்று வரையுள்ள செயற்பாடுகளைத் தர விரும்புகிறோம். சிறு தவறுகள், பிழைகள் ஏற்படின் மன்னிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| கு 105<br>பு 106 | செ<br>8 | 12 | ல / 26 |
| கே 98<br>வெ 90 | இரக | | 2 |
| | நிலை | | சந் 31<br>ரா 44 |
| 7 | 6 | வி<br>63 | சனி<br>52 |

1923-ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 29-ந் திக திக்குச் சமமான துந்துபி வருடம் பங்குனி மாதம் 16ந் திகதி வியாழக்கிழமை மத் தியானம் 12-30 மணியள வில் வியாபாரி மூலையி லுள்ள பெரிய கிளானை என்னும் இடத்தில் நாம் பிறந்ததாகக் குறித்து வைத் துள்ளார்கள். தகப்பனார் பெயர் ஆழ்வாப்பிள்ளை. சிவக்கொழுந்து தாயார் பெயர். கோணாமலை சரவண முத்து மகள் இராசம் [சித்து]. எமது ஐந்து வயது காலம் வரையில் தகப்பனார் பதுளையில் நகைக் கடை வைத்தி ருந்தார். விவாகம் செய்யும்போது எமது தாயாருடன் அவ வது சகோதரியையும் விவாகம் செய்திருந்தார். ஐந்து வய தின்மேல் பதுளையிலுள்ள நகைக் கடையை விட்டுவிட்டு உள்ளூரில் உள்ள சொந்தத் தோட்டங்களில் கமஞ்செய்ய

ஆரம்பித்தார். கமம் செய்வதற்கு அக்காலத்தில் பயிர்களிற்கு இறைப்பதற்கு மூன்று பேர் தேவை. அக்காலத்தில் துலாவில் பட்டையின் மூலமே இறைப்பது வழக்கம். இறைப்பதற்கு துலா ஓடுவது முழுவதும் எம்மைச் சார்ந்ததே. காலை 5-30 இற்கு நித்திரை விட்டெழுந்ததும் ஆடு, மாட்டின் குப்பைகளைத் தோட்டத்தில் கொண்டு போய்ப் போட்டு வரும் வழியில் பிள்ளையார் ஆலயத்தையும் வணங்கி வருவது வழக்கம். எமது பிதா கிராமத்தில் கமஞ்செய்யத் தொடங்கியதும் மது பாவிக்கும் பழக்கத்தை அல்லும் பகலும் மேற்கொண்டார். இக் காரணங்களினால் அத்தெருவில் குடியிருப்போர் மது வார்த்தை காரணமாக கொடுமை தாங்கமுடியாத நிலையில் இருந்துள்ளார்கள். இக்காலத்தில் எமது குடும்ப நிலையோ சொல்லும் தரமன்று. ஆடு வளர்த்துப் பால் விற்பது, புழுங்கல் குத்தி அதில் வரும் கூலி அரிசியை வாங்குவது, மா இடித்து அதனால் வரும் கூலியை வாங்குவது இப்படியான கஷ்டமான நிலையில் ஒரு நேரம் உணவருந்தியும், சீனியில்லா தேனீர் பருகியும், படிப்பதற்குரிய பென்சில்கள் வாங்குவதற்குரிய பணமின்றியும் சொல்ல முடியாத மிகப்பெருந் துன்பத்தை அநுபவித்துள்ளோம். ஓர் நாள் ஆடு, மாடுகளுக்குப் புல்லுப் பிடுங்கி வரும் வழியில் குளத்தடியில் நின்று விளையாடிய காரணத்தினால் மதுப்பிரியரான எமது தகப்பனார் அப்படி விளையாடவில்லை எனப் பொய் சொன்ன காரணத்தினால் ஒரு கப்பைச் சுற்றி இரண்டு கையையும் கட்டிவிட்டு காய் மிளகாயை வாங்கி இரு கண்களுக்கும், மல வாசலுக்கும் இட்டுள்ளார். இதன் பின் அன்றைய தினம் நடந்தவை எமக்குத் தெரியாது. பிற்பாடு கொடுமை காரணமாக பொய் சொல்லுவதில்லை என்னும் சபதத்தை நாம் எடுத்துள்ளோம். மதுப்பிரியரான தகப்பனார் மாலையில் மது வெறியில் வந்ததும் விரத தினங்கள் சில நீங்கலாக மற்றைய எந்நாட்களிலும் பனையோலை மட்டை, தென்னோலை அடிமட்டை, வேலியிலுள்ள பூவரசங் கம்புகள் இவைகளைப் பயன்படுத்தத் தவறுவதில்லை. இரண்டாம் வகுப்புப் படிக்கும்போது கணக்குப் பிழையாகச் சொன்ன காரணத்தினால் கையை நீட்டும்படி சொன்ன ஆசிரியரின் கேள்விப்படி அவர் சொல்லு முன்னே கையை நீட்டித் தண்டணையைப் பெற்றுள்ளோம்.



நாலாம் வகுப்புப் படிக்கும் காலத்தில் சுமார் ஒன்பது வயதளவில் ஒரு மனனப் பிரசங்கம் செய்த பரிசாக "திருக்குறள்" என்னும் நூலை அளித்துள்ளார்கள். இக்காலங்களில் அத்தெருவில் வாழ்ந்த மக்களுடன் மதுப்பிரியரான தகப்பனின் வார்த்தை காரணமாக எவருடனும் நட்பு வைத்துக் கொண்டதாக எமது சிந்தனைக்குத் தெரியவில்லை. எமது ஐந்தாவது வயதளவில் மகேஸ்வரி எனும் ஒரு சகோதரி பிறந்தார். நாம் ஒரேயொரு பாடசாலையாகிய மேலைப் புலோலிச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலேயே ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை கற்றுள்ளோம். பண வசதி, உணவு வசதி குறைவான காரணத்தினால் வேறு பாடசாலைக்கு மாறவில்லை. 5, 6, 7, 8, 9-ம் வகுப்புக்களில் ஒவ்வொரு வருடங்களிலும் கணித பாடத் திறமைப் பரிசு, எழுத்துத் திறமைப் பரிசு, சகல பாடத் திறமைப் பரிசு, தேவாரப் பரிசு, அறநெறிப் பரிசுகள் எல்லாவற்றிலும் முதலாவதாகவே இருந்துள்ளோம். படிப்பு வேலை, வீட்டு வேலை, ஆடு மாட்டிற்கு உணவு தேடும் வேலை, பயிர்கள் நட்டு காய்கள் பிடுங்கி விற்கும் வேலை முதலிய சகல வேலைகளிலும் உடல் உழைப்பால் கஷ்டப்பட்டே சீவனம் நடத்தியுள்ளோம். எமது கனிஷ்ட தராதரப் பத்திர வகுப்பில் இப் பாடசாலையிலிருந்து தோற்றிய எண்மரில் நாமும், கந்தவன சாஸ்திரியாரும் சித்தியெய்தியுள்ளோம். கந்தவன சாஸ்திரியாரை இன்று காணும் போதெல்லாம் தனக்கென ஒரு வீடில்லாது கிராமம் கிராமமாக அலைந்து திரிகிறாரே என்பதை நினைக்கும்போது எமது மனம் மிக வேதனைப்படுகிறது. கனிஷ்ட தராதரப் பத்திர வகுப்பு சித்தியெய்தியதும் எமது 13 ஆவது வயதில் எம்மைப் பத்து மாதம் சுமந்தெடுத்து, எம்மை இந் நிலைக்கு ஆளாக்கிய எமது அன்னை காலஞ் சென்றுவிட்டார். இதன் பிற்பாடு தாயாரில்லாத காரணத்தினால் தாயார் செய்ய வேண்டிய சகல வேலைகளையும் நாமே செய்ய வேண்டி ஏற்பட்டது. எமது தாயாரின் சகோதரியான சிற்றன்னைக்கு சிறுசிறு பிள்ளைகள் அநேகம் இருந்தமையால் அவவால் சமையல் செய்யவும் முடிவதில்லை. ஆகவே சமையல் வேலை செய்யும் முழுப் பொறுப்பையும் நாமே கவனிக்க வேண்டியதாயிற்று. எமது தெருவிலுள்ள

மற்றைய மக்கள் அத்தனை பேரும் மதுப் பழக்கமுள்ள தூஷண வார்த்தை பாவிக்கும் எமது பிதாவின் காரணமாக எம்முடன் சந்தோஷமாய் இருக்கவில்லை என்பதை முன்னரே கூறியிருந்தோம். சமையல் வேலையையும் நாமே செய்ய வேண்டிய நிலையில் ஓர் நாள் கறியின் சுவை சரிவர அமையாத தன்மையினால் மதுப்பிரியரான எமது தகப்பனார் அக்கறிச் சட்டியைத் தலையில் போட்டு உடைத்து விட்டார். இதன் பிற்பாடும் மதுப் பாவனை காரணமாக கொடுமைகள் தாங்க முடியாத நாம் வெளியூருக்குச் செல்லலாமென ஆலோசனை வகுத்திருந்தோம். ஒரு நாள் மது வெறியில் வந்த தகப்பனார் உணவு சரில்லாத தன்மையினால் எம்மை வீட்டிற்குள் கொண்டு சென்று நிலத்தில் விழுத்தி அதற்கென வாங்கி வைத்திருந்த கூரான வில்லுக் கத்தியினால் கழுத்தில் குத்திக் கொலைசெய்ய எத்தனித்துள்ளார். இதையறிந்த சிறிய தாயார் பக்கத்து வளவிலுள்ள திரு. வே. த. ச. சுப்பிரமணியம் அவர்களையும், அபிராம் அச்சகம் நடத்தும் சிறீஸ்கந்தராசா அவர்களின் தகப்பனாரான வே. திருநாவுக்கரசு அவர்களையும் கூட்டி வந்து கத்தியைப் பறிப்பித்து எம்மை வேறோர் வீட்டிற்கு அனுப்பியிருந்தார்கள். இக் காரணங்களினாலே வெளியூர் செல்வதென முழு மனதாகத் தீர்மானித்து, அத்தெருவில் உள்ள சிலரின் உதவியை நாடி, அவர்களின் கடையில் போய்ச் சிலகாலம் இருந்துள்ளோம். எக்கடையில் இருந்தாலும் எமக்கு அவர்கள் முதலிடமே வகுத்துத் தந்துள்ளார்கள். இதே விதமாக அத்தெருவிலுள்ள இன்னும் 2, 3 கடைகளுக்குப் போய் நின்றதும் மதுவெறியில் வரும் தகப்பனார் எமக்குத் தரவேண்டிய சம்பளப் பணத்தைக் கடும் சொல் பேசித் தானே வாங்கியுள்ளார். இதன் பிற்பாடு கடைக்குப் போவதை நாம் விரும்பவில்லை. எமது செலவுக்குப் பணம் இல்லாத நிலையில் சிறிய தாயாரது வீட்டில் இருந்து வந்தோம். பணக் கஷ்டம் காரணமாக வண்டிலில் மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வந்து நாமே சுமந்து கடைகளுக்குப் பறித்தல், தோட்டவேலை செய்தல் முதலிய சிறுசிறு வருவாயுடன் காலத்தைக் கடத்தலானோம். இக்காலம் எமது பதினெட்டு வயது வரையில் இருக்கலாம்.

[மிகுதி வளரும்]



## ஐந்துபூத விகிதாசார விளக்கங்களும் அவை எப்படிக் கூடிக் குறைகின்றன என்ற விளக்கங்களும்

முனிவர்கள் தங்கள் ஆன்ம ஈடேற்றம் காரணமாக யோக நிட்டையிலிருந்து சிலபல அரிய காரியங்களைச் செய்திருப்பதாக புராண வரலாறுகள் கூறுகின்றன. யோக வலிமையினால் கொக்கை எரித்த சந்நியாசி, கடமையைக் கண்ணியமாகப் போற்றும் ஒரு அன்னையின் வீட்டுக்குச் சென்று உணவு தரும்படி வேண்டுகிறார். கடமையே கண்ணியமெனப் போற்றும் அந்த அன்னைக்கு சந்நியாசியின் கர்வமுறை விளங்கியதனால் உன்னைப் பற்றி அதிகம் எண்ணிவிட வேண்டாம் என மறுமொழி கூறியுள்ளார். ஆனால் நாம் இங்கே எமது சிந்தனையை வளர விடுகிறோம். உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்னும் பேரவா கொள்ளுகிறோம். இங்கே இரு விஷயங்கள் முன்னுக்கு நிற்கின்றன. முதலாவதாக யோக வலிமையில் செய்யும் செயல் சிறந்ததா? கணவனைக் கடவுளெனப் போற்றி தனது கடமையில் வழுவாது கடமை வலிமையிற் செய்த செயல் சிறந்ததா? என உள்ளத்தைக் குடைந்து குடைந்து ஆராய்கிறோம். யோகம் என்பது தனது உடல் நலத்துக்காக தன்னை வருத்திச் செய்யும் ஒரு செயலாகும். இச் செயல் எக்காலமும் பொதுநல சேவையற்ற ஒரு செயலாகும். தனது கடமையே கடவுளெனப் போற்றி உடலை வருத்தி தனது அங்கத்தால் எவ்வளவு அதிகம் செய்ய முடியுமோ அவ்வளவு செயலையும் சுயநலத்தை மறந்து அர்ப்பணித்துச் செய்தலே கடமை உணர்வு. ஆதலால் எவ்வுயிருக்கும் செய்யும் கடமையே சிறந்ததென உண்மையைக் கூறுவது எமது கடமையாகிறது. ஆகவே தவ வலிமையிலும் பார்க்கச் சுயநலம் அற்ற கடமையுணர்வே மேலானதென ஆணித்தரமாக அறுதியிட்டுக் கூறுகிறோம். தவ வலிமையினால் ஞானப் பொருளை அடைய முடியாவிட்டாலும் கடமையுணர்வின் மூலம் ஞானத்தை அடையலாமென்பது வெள்ளிடை மலையாகத் தெரிகிறது. ஆகவே கடமையைச் சரிவரச் செய்துகொண்டு வருபவர்களுக்கு அறிவு விளக்கம் மேலோங்குமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

காட்டிலே விறகு வெட்டிச் சிவனஞ் செய்கின்ற கணவனே தெய்வமெனப் போற்றிக் கருமமாற்றும் பெண் ஒருத்தி கணவனின் இரு கால்களும் இழந்த நிலையில் கணவனைக் கூடையிற் சுமந்து கருமமாற்றுகிறாள். சிவனோபாயம் காரணமாக கிராமங் கிராமமாக அலைந்து கடமையைச் சரிவரச் செய்து கணவனைக் காப்பாற்றி வருகிறாள். கிராமம் மாறும்போது கணவனைக் கூடையிற் சுமந்து மறு கிராமத்திலுள்ள மாநிழலில் இறக்கிவிட்டு மலசலங் கழிக்கவிட்டு தேசசுத்தி செய்துமுடிந்ததும் செலவுத் தேவைக்காக கிராமக் கூலிவேலை செய்து உணவைத் தேடிக் கொண்டுவந்து கணவனுக்கு உண்ணக் கொடுத்தபின் தானும் மிகுதியை உண்டு காலங்கழித்து வருகிறாள். ஒரு நாள் சாயங்காலம் அடுத்த கிராமத்துக்குத் தொழில் காரணமாகப் போகவேண்டி ஏற்பட்டதும் காலிழந்த கணவனைக் கூடையிற் சுமந்து காட்டுவழியாக அடுத்த கிராமம் போகிறாள். போகும் காட்டுவழியில் துறவு பூண்டு தவஞ்செய்து கொண்டிருக்கும் சந்நியாசிமேல் தடக்கியதும் சாமர்த்தியத்தால் கீழே விழவில்லை. சந்நியாசிக்கு தனது தவத்தைக் கலைத்துவிட்டதால் ஆறாக் கோபம் மூண்டதும் விடிவதற்குள் உனது கணவன் இறக்கக்கடவது எனச் சாபம் இடுகிறார். மங்கைக்குத் தனது கணவனை இழப்பதென்பது முடியக்கூடிய கருமமாய்த் தென்படவில்லை. இன்றைய காலகட்டத்தில் வேறு ஒரு பெண்ணாக இருந்தால் தினசரி கூடையில் சுமந்து திரியும் ஒரு செயலுக்கு இன்றோடு ஒரு முற்றுப் புள்ளி வைக்கலாமெனவே எண்ணுவாள். ஆனால் இங்கே கடமையுணர்வு மிக்க இம்மங்கை விடியாமல் இருக்கக் கடவது எனச் சாபமிடுகிறாள். இங்கே நாம் எமது சிந்தனையை உள்ளத்தைக் குடைந்து ஆராய முற்படுகிறோம். சந்நியாசியின் தவம் பெரிதா? கடமையே கண்ணியமெனப் போற்றும் மங்கையின் வார்த்தை பெரிதா? இங்கே சந்நியாசியின் வார்த்தை பலிக்கவில்லை. ஆனால் விறகு வெட்டிச் சிவனஞ் செய்யும் ஒரு மங்கையின் வார்த்தை பலித்துவிட்டது. இங்கே நாம் சிந்தனையை மறுபடியும் தூண்டுகிறோம். யோக வலிமை மிக்கவரின் சாபத்தைவிட கடமையே கண்ணியமெனப் போற்றும் கூலிக்காறியின் வார்த்தை செயற்பட்டதையிட்டு ஆராய வேண்



டியது முதற் கடமை. அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று சொல்லிக் காலத்தைக் கடத்துவது எமது நோக்கமல்ல. ஐந்துபூத விகிதாசாரத்தின் ஏற்ற இறக்கமே இப்பிரபஞ்சம் முழுவதையும் ஆட்டிப்படைக்கின்றன. தற்சமயம் மக்களுக்குச் சுலபமாக விளங்கப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டு நிலப்பூதம், ஆகாயப் பூதங்களைத் தவிர்த்து மற்றைய மூன்று பூதங்களை மட்டும் விளக்கித்தர எண்ணியுள்ளோம். எமது தூல உடலானது வாத, கப, பித்தம் என்னும் மூன்று விதமான செயற்பாட்டிலே தங்கியுள்ளதைக் காணுகிறோம். ஐந்து பூதங்களும் சுமார் 100 கோடி அளவினதாக அமையுமிடத்து ஐந்து பூதங்களுமாக சராசரி மொத்தமாக 100 கோடி அணுவளவாக இருக்கலாம். இவற்றில் நிலப்பூதம் 20 கோடி அணுவளவையும், ஆகாயபூதம் 20 கோடி அணுவளவையும் புறம்பாக வைத்துக்கொண்டு வாத, கப, பித்தமென்னும் மூன்று பூதங்களை சுலபமாக விளக்குவதற்கு எண்ணியுள்ளோம்.

தீ. நீர், காற்று ஆகிய பூதங்களை உடற் கூற்றில் பித்தம், கபம், வாதம் என அழைக்கிறோம். இவற்றில் வாதத்துக்கு 3 எண்ணையும், கபத்துக்கு 2 எண்ணையும், பித்தத்துக்கு 1 எண்ணையும் வகுத்துள்ளார்கள். இங்கே நாம் சிந்தனையைச் செலுத்த முற்படுவது இவ்வாறு எண்களை ஏன் அமைத்தார்கள் என்பதையே. முதல் எண்களாக 1, 2 இருக்க 3 எண்ணை ஏன் முதலாவதாக வைத்தார்கள் என்பதையே. ஒன்று எண் சூரியனையும், பிதாவையும், தீயையும், பித்தத்தையும் இப் பிரபஞ்சத்தின் ஆரம்பத்தையும் குறித்து நிற்கின்றதென்பதை முன்னரே கூறியுள்ளோம். 2 எனப்படும் எண்ணும் சூரியனிலிருந்து உருவான சந்திரனையும், மாதாவையும், நீரையும், கபத்தையும் குறித்து நிற்கின்றதென்பதையும் கூறியுள்ளோம். மூன்று எண் சூரிய சந்திரனிலிருந்து உருவான காற்றையும் புதல்வரையும், வாதத்தையும் அறிவு முதலானவற்றையும் அடக்கி நிற்கின்றதென்பதையும் கூறியுள்ளோம்.

நல்ல செயல் நடைபெறுவதற்கு காற்றே மிகமிக முக்கியம். ஆகவே எமது மனதில் நல்லெண்ணங்கள் ஏற்படுமானால் சுத்தமான காற்றும் ஞான ஒளியும் ஏற்படுவது

மறுக்க முடியாத உண்மையாகும். பல்லாயிரம் வருடங்கள் செல்லச் செல்ல ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐந்தறிவு, ஆறறிவு என வளர்ந்து ஆறறிவான மனித ஆத்மா பிறவிப் பெருங்கடலை நீந்த முடியாமல் திரும்பத் திரும்ப கீழ் நிலைக்குச் செல்கிறோம்.

ஒன்று எண் குறிப்பிடும் தீயான இப் பிரபஞ்சத்தில் உருவான ஆன்மா ஒன்பது எண் குறிப்பிடும் ஞான ஒளியை அடைந்தே தீரவேண்டும் என முன்னரே குறிப்பிட்டு இருந்தோம். இங்கே நாம் பஞ்ச பூதங்களான ஐந்து பூதங்களில் நிலத்தையும், ஆகாயத்தையும் தவிர்த்து எஞ்சிய மூன்று பூதங்களை மட்டும் சிந்தனையில் எடுத்து சுலபமான முறையில் விளக்கம் தருவதற்காக ஆராய முற்படுகிறோம். மூன்று பூதங்களில் ஒன்று எனப்படும் தீப்பூதம் 19 கோடி அணுவளவாக அமைந்திருக்கலாம் என வைத்துக் கொள்வோம். நீர்ப்பூதம் 22 1/2 கோடி அணுவளவாக அமைந்து இருக்கலாமென வைத்துக் கொள்வோம். ஆனால் மூன்று எண் குறிப்பிடும் காற்றுப் பூதமானது 60 கோடி அணுவளவில் மிகுதியான 18 1/2 கோடி அணுவளவாய் இருக்கலாமென வைத்துக் கொள்வோம். இங்கே நாம் மிக மிக அவதானிப்பது என்னவென்றால் ஒன்று எனப்படும் தீப்பூதமும், இரண்டு எனப்படும் நீர்ப்பூதமும் ஒன்றுக்கொன்று எதிரானவை. இவற்றில் எது கூடுதலான அணுவளவாகச் செறிந்துள்ளதோ அப்பூதத்தின் வலிமை மிக்க ஆட்சியே அங்கு நடைபெறுகின்றது. நாங்கள் மேலே குறிப்பிட்ட பிரகாரம் நீர்ப்பூதம் கூடுதலாய் அமைந்த காரணத்தினால் நீர்ப்பூதத்தின் ஆட்சியே நடைபெறுவதாக அனுமானிக்க முடியும். இந் நீர்ப்பூதத்தைச் சுத்தமாக்க வேண்டிய தேவை ஏற்படுமிடத்து காற்றுப்பூதமும் தீப்பூதமும் முக்கிய தேவையாகிறது. ஒளிப்பூதம் சிறுகச்சிறுக கூடி அமைந்ததும் ஒளிப்பூதத்தின் வலிமை கூடுதல் காரணமாக நீர்ப்பூதத்தில் உள்ள காற்றைப் புறம்பாக்கி ஞானப்பூதம் திறம்படச் செயற்பட உதவுகிறது.

ஆனால் நீர்ப்பூதத்தில் சிறு தொகையான காற்றும், சிறுதொகையான ஒளியும் படாமலிருந்தால் நிமிஷத்திற்கு நிமிஷம் ஏராளமான கிருமிகள் ஏற்படுவதைத் தவிர்க்க



முடியாது. இங்கே நாம் இன்னும் சிந்தனையை வளர விடுகிறோம். ஓர் மழை பெய்யும் நேரம் கீழே விழும் நீரை ஒரு சிரட்டையிலேயோ, ஏதாவது பாத்திரத்திலேயோ எடுத்து ஒளி, காற்றுப்பட முடியாத ஒரு பொந்துக்குள் வைக்கிறோம். அதே நேரம் இன்னுமோர் சிரட்டையிலோ, பாத்திரத்திலோ கொஞ்ச நீரை எடுத்து முற்றுமுழுதான ஒளி மிகுந்த இடத்தில் வைக்கிறோம். இரண்டு, மூன்று தினங்கள் சென்றதன்பின் ஒளி மிகுந்த இடத்தில் வைக்கப்பட்ட நீரானது முழுவதும் ஆவியாகி அந்தப் பாத்திரம் சுத்தமானதாக இருக்கக் காண்கிறோம். ஆனால் ஒளி, காற்றுப் படாத இடத்தில் வைத்த நீரில் ஏராளமான கிருமிகள் இருக்கக் காண்கிறோம். ஒளிபடாமல் காற்று அசுத்தமடைந்த இடங்களில் விஷக் கிருமிகளான தேள், பூரான், சிலந்தி முதலியன உற்பத்தியாவதை நாளாந்தம் கண்டு கொண்டிருக்கிறோம். இங்கே நாம் எமது சிந்தனையை மேலும் மேலும் வளரவிடுவது இதிலுள்ள உண்மையைக் கண்டு பிடிப்பதற்கேயாகும். எமது தூல உடலில் வாத, பித்த, கபமான நோய்கள் ஏற்படுமிடத்து அந்நோய்களின் கூடிக்குறைந்த அணுக்களைச் சமன் செய்து அந்நோயை நீக்கி விடுகிறோம். இந்நோய்களை நீக்குவதற்கு வைத்தியம் மூலகாரணமாகிறது. எமது தூல உடலிலுள்ள நோயைக் குணப்படுத்துவது போல எமது தூல உடலைச் சுற்றி ஆட்டிப் படைக்கும் சூக்கும தேகத்திலும் இம் முப்பூதங்களின் அணுவளவு கூடிக் குறைவு காரணமாக நோய்கள் உண்டாகின்றன. இந்நோயை வைத்திய முறையில் தீர்க்க முடியாது. எமது சூக்கும உடலிலுள்ள எண்ணக் கருவிற்கேற்பவே இப்பூதங்கள் கூடிக் குறையும்.

இதற்கு உதாரணமாக ஒரு செயலை விளக்க முற்படுகிறோம். இருவர் இருந்து கொண்டிருக்கும் ஓர் இடத்தில் அவ்விருவருக்கும் முன்பாக ஓர் எறும்பு சென்றுகொண்டிருக்கிறது. ஒருவரது மனநிலையிலுள்ள தீப்பூத அளவு காரணமாக அவர் அந்த எறும்பை ஒரு கடதாசியிலோ அல்லது தடியிலோ பிடித்துக் கொண்டு போய் வேறோர் இடத்தில் போட்டுவிட்டு வருகிறார். ஆனால் மற்றவருக்கு அவரது மனநிலையிலுள்ள தீப்பூத அளவு காரணமாக

அந்த எறும்பு தன்னை எப்படியும் கடித்துவிடும், இந்த எறும்பை எப்படியும் சாகக் கொல்ல வேண்டும் என்று நினைந்து அதை நசித்துக் கொன்று விடுகிறார். இந்த இருவரில் எறும்பைக் கொண்டு போய் எறிந்தவரின் மன நிலையில் தீப்பூதம் கூடுகிறதா? அல்லது எறும்பைக் கொன்றவரின் மனநிலையில் தீப்பூதம் கூடுகின்றதா? என்பதை ஆராய வேண்டும்.

அடுத்ததாக எமது உள்ளத்தைக் குடைந்து உண்மையைக் கண்டுபிடிக்கும் நோக்கமாக மாணிக்கவாசகரின் ஒரு பாடலையும் சிந்தனையில் வளர விடுகின்றோம்.

'' உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன்
பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்..............................
..........................................................................
கற்றாவின் மனம்போல கசிந்துருக வேண்டுவனே.''

என்று இறைவனை வேண்டுகிறார். இங்கே நாம் அவதானிக்க வேண்டிய விஷயங்கள் பலவுண்டு. என்றாலும் அவற்றைச் சுருக்கி சொந்தக்காரரையோ, ஊரையோ, எனது பெயரையோ, பெரியவர்களையோ எனக்குத் தேவையில்லை என்கிறார். இங்கே நாம் எமது சிந்தனையை இன்னும் வளர விடுகிறோம். பெரும்பாலும் கோயிலிலே இச் சொல்லை எவரும் சொல்ல முடியாது. கோயில் எதிரில் ஒருவர் இப்படிச் சொல்லுவாராக இருந்தால் அவரை முழுப்பொய் சொல்லுபவராக கருத இடமுண்டு. ஒருவர் கோயிலிலே போய் வணங்குப்போது தனது பிள்ளை குட்டிகள் பெற்றார்களுக்கே முதலில் நன்மை அருளும்படி வேண்டுதல் செய்வார்கள். ஆனால் இங்கு மாணிக்கவாசகர் அந்த மாதிரிச் செயற்படவில்லை. '' கற்றாவின் மனம் போல கசிந்துருக வேண்டுவனே '' என்ற வார்த்தையை ஆராய முற்படுகிறோம். இதுவும் எல்லோரும் உண்மை நிலையில் சொல்லக் கூடிய ஒரு சொல்லாய் இருக்க முடியாது. கன்றைப் பிரிந்த பசுவானது அக்கன்றின் இளம் பருவத்தை நோக்கி அதற்கு ஏற்படப்போகும் ஆபத்தை



உணர்ந்து தன்னலங் கருதாது தொண்டை நோகக் கன்றைக் கூப்பிடுகிறது. இக் கன்றானது அடுத்த கன்று ஈன்றதும் எங்கே இருக்குமோ சொல்ல முடியாது. சிறிது காலத்தில் தன் கன்று தன்னை விட்டுப் பிரியும் என்று தெரிந்த இந்தப் பசு ஞான அறிவு காரணமாக [ கடமையுணர்வு ] அழுகிறது.

ஒரு மனிதன் கசிந்துருகுவதாக நாங்கள் வைத்துக் கொள்வோம். அவர் ஏன் கசிந்துருகுகிறார் என்பதையும் ஆராய வேண்டியது எமது கடமை. அவரது பிள்ளைகளோ, உற்றாரோ, உறவினரோ சறுக்கி விழுந்ததால் ஒரு காயம் ஏற்படுகிறது. இக்காயத்தை நீக்கும்படியாகக் கசிந்து உருகுகிறார். இக்கசிவு சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது. என்றோ ஒரு நாள் அப்பிள்ளையோ, உறவினரோ அவருக்கு ஒரு ஆகாரத்தையோ, நீரையோ கொடுக்கலாம். அல்லது வேறு விதமான உதவிகளைச் செய்யலாம். இச் சுயநலம் காரணமாகவே அவர்கள் பட்ட கஷ்டத்திற்காகக் கசிந்து உருகுகிறார். ஆனால் கன்றைப் பிரிந்த பசுவானது கசிந்து இரங்கிய செயலுக்கும், இந்த மனிதன் செய்த செயலுக்கும் ஏராளமான ஏற்றத் தாழ்வுகள் உண்டு. அக் கன்றைப் பிரிந்த பசுவினது எதிர்காலம் ஒளிப்பூதம் மிகுதியாகி அதனிலும் மேலான ஓர் பிறவிக்குப் போய்ச் சேருகிறது. ஆனால் மனிதனோ ஒளிப்பூதக் குறைவு காரணமாக நீர்ப்பூதம் கூடி பூதவிகிதாசாரத்திற்கமைவான வேறு பிறவிகளிற்குப் போய்ச் சேருகிறான்.

'' ...ஒருவர் தனக்காக மட்டும் வேலை செய்தால் அவர் ஒரு பெரிய படிப்பாளி என்றோ, பெரிய ஞானி என்றோ, ஒரு சிறந்த கவிஞர் என்றோ பெரும் புகழ்மிக்கவராகலாம். ஆனால் அவர் ஒரு புகழ்மிக்க உண்மையான மகான் ஆகமாட்டார்.''

---

'' ...நான் என்னும் அகங்காரத் தற்பெருமையாகிய குறுகிய சிப்பிக்குள்ளே சுருங்கிக் கொண்டிருக்க வேண்டாம். மனிதர்களுக்கு சேவை செய்வதற்கான வழிகளையும் சாதனங்களையும் தேடுவதற்கு முயற்சிசெய்.''

—

# திட்டிய அரிசி, கோதுமை மாப்பண்டங்கள் நோயாளர் சமூகத்தின் தாய் தந்தையர்!

உயிர் வாழ உணவு இன்றியமையாதது. நாம் உட்கொள்ளும் உணவில் மாச்சத்து, நார்த்தன்மை, புரதம், கொழுப்பு, உயிர்ச்சத்து, கனியுப்புக்கள் அடங்கியுள்ளன.

நார்த் தன்மையினால் ஏற்படும் பல நன்மைகள் எம்மால் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றன. நார்த்தன்மையில் போஷாக்கு இல்லை. எனினும் பெருங்குடல் சீராக வேலை செய்வதற்கும், மலத்தை வெளியேற்றுவதற்கும் அது நன்கு உதவுகிறது. அத்துடன் நாம் உட்கொள்ளும் மாமிசத்தை கட்டுப்படுத்துகின்றது;

நார்த்தன்மை பிரதானமான தாவரங்களின் கலமென் சவ்வுகளில் காணப்படுகின்றது. இதை எந்த மிருகத்தினதோ அல்லது மனிதரினதோ சுரப்பு நீர் சீரணிக்க முடியாது. ஆகையால் தாவரத்தில் இருக்கும் சத்தைப்பெற மிருகங்கள் தாவர உணவை நன்றாக மென்று உண்ணுகின்றன. ஆனால் சோம்பேறி மனிதனும் இக்கொடையைப் பெற்றுள்ளான். இவ்வுணவை இயற்கையாகவே உண்ணாமல் பல கிரியைகள் கொண்டு பாகப்படுத்திய பின்னர்தான் உண்கின்றான். இதுதான் பிரச்சினையின் மூலவேர்.

உணவை அரைத்து, சமைத்து, பாகம் பண்ணும்போது காபோவைதரேற்று சுத்திகரிக்கப்பட்ட மாச்சத்தாக மாறுகின்றது.

சிவந்த நாட்டரிசிச் சோற்றையும், தவிட்டுப் பாணையும் பல நிமிடங்கள் மென்றால்தான் விழுங்கலாம். வெள்ளை அரிசியும், வெள்ளைப் பாணும் அப்படியல்ல. ஆகையால் தவிடு நீட்டிய வெள்ளை அரிசியையும், பாணையும் உண்பவர்கள் தேவைக்கதிகமாகவே உணவை உட்கொள்ளுகிறார்கள்.

நார்த்தன்மை நமதுடலுக்குள் செல்லும் சக்தியையும் காபோவைதரேற்றுச் சிரணிப்பையும், இன்சுலின் சுரப்பையும் கட்டுப்படுத்துகின்றது. இரத்தத்தின் கொலஸ்ரோலைக் குறைக்கின்றது. அத்துடன் குடற் செயற்பாடுகளையும் ஆரோக்கியத்தையும் பேணுகிறது. காய்களிலும் நார்த்தன்மை கூடுதலாகக் காணப்படுகின்றது.



நார்த் தன்மையினது நன்மையையுணர்ந்த பலர் மரக்கறி உணவு உண்பவர்களாக மேலைநாடுகளிலும்கூட இன்று மாறி வருகின்றார்கள்.

குடலின் மேற்பாகத்தில் சிரமத்துடன இறங்கும் நார் சேர்ந்த உணவு கீழ்ப்பாகத்தில் இலகுவாக இறங்குகின்றது. இதனால் மலச் சிக்கல் குறைகின்றது. நார்ச்சத்துக் குறைந்த பண்டங்களை உண்பதால் நாம் பல நோய்களுக்கு ஆளாகிறோம்.

கிளீங் என்பவர் 1969 இல் தனது ஆராய்ச்சியில் மாரடைப்பு வியாதி ஏற்படுவதற்கு வெள்ளை நிறக் கோதுமைமாப் பாணும், சுத்திகரிக்கப்பட்ட சீனியும் முக்கிய காரணிகள் என அறிவித்துள்ளார்.

கோதுமையை அரைக்கும் பொழுதும், சீனியை சுத்திகரிக்கும் பொழுதும் நார்த்தன்மை இழக்கப்படுவதுடன் தேவைக்கதிகமாகவே சுத்திகரிக்கப்பட்ட குளுக்கோசைப் பெறுகிறோம். இதற்குரிய தண்டனையாக குடற் தொழிற்பாடுகள் குறைவதுடன் மேலதிக சக்தி தரும் குளுக்கோசைப் பெறுகிறோம்.

## இன்சுலின் சுரப்பு பாதிப்பு :

பாண் உண்பவர்கள் குறைந்தளவு நார்ச்சத்தையும் மேலதிக சக்தியையும் பெறுகிறார்கள். இந்த மேலதிக சக்தி உடற்பருமனையும் அதனால் ஏற்படும் நீரிழிவு, பித்தப்பைக் கோளாறு, டைவேற்றி குலைற்றிஸ், குடல் புற்றுநோய் போன்ற நோய்களையும் ஏற்படுத்துகின்றது. நார்த்தன்மை குறையும்போது இன்சுலின் சுரப்பும் பாதிக்கப்படுகின்றது.

இன்று திருகோணமலை பல்தேச ஆலை நிறுவனத்தில் அரைக்கப்படும் கோதுமையில் வெளிக்கோதில் இருக்கும் தவிட்டுடன் சேர்ந்த நார்த்தன்மையுள்ள மாவை குறுணிகளாக்கி ஜப்பானுக்கு முழுவதையும் ஏற்றுமதி செய்கின்றார்கள். இப்படி அரைத்த மாவைத்தான் அமெரிக்காவும் முன்பு P. L. 486 ஒப்பந்தத்தின்படி இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியது.

ஜப்பானியர் திருகோணமலையில் பிறிமா ஆலையைத் தொடங்கிய பொழுது இலங்கை அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி கோதுமை அரிசியை இறக்குமதி செய்து அரைக்கின்றனர். வெளிப்பாகத்தில் இருக்கும் தவிட்டுடன் சேர்ந்த நார்த் தன்மையுடைய மாவைக் குறுணலாக்கி தமது நாட்டு மக்களின் பாவனைக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

## விலங்குகளின் உணவு :

உள்ளுக்குள் இருப்பது சுத்திகரிக்கப்பட்ட களி மாச்சத்து. இதை மாவாக்கி இந்த நாட்டு மக்களுக்கு விநியோகிக்கின்றனர். இந்த மா உண்மையில் மா அரைக்கும் தொழிலில் ஒருபக்க விளைவுப் பொருள்.

இதை இலாபகரமாக எம் மக்களுக்கு விற்கின்றனர். இந்த ஆலை அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இருந்தால் அங்கு அரைக்கப்படும் மா பன்றிகளுக்கும், மந்தைகளுக்கும் உணவாகும்.

ஆகையால் வாய்க்கு உருசியாகச் செய்யப்படும் கோதுமை மாப் பண்டங்களை உண்டு எமது சவக்குழிகளை நாம் எமது பல்லினால் தோண்டுகிறோம்.

சென்ற தலைமுறையில் எம் மூதாதையர் அரிசி, குரக்கன், சாமி, பனங்கிழங்கு, பனாட்டு போன்ற நார்த்தன்மையுடைய உணவினை உண்டு ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள்.

**உணவின் மாறுதல் :**

★ இங்கிலாந்துச் சீமைக்கும், பிற நாடுகளுக்கும் மேற்படிப்பிற்காகச் சென்ற எம்மவர்கள் ஐரோப்பியரின் உடை மற்றும் பழக்கவழக்கங்களை முற்றுமுழுதாகப் பற்றிக்கொண்டார்கள். இதைக் கண்ணுற்ற படியாத செல்வந்தர்களும் அரிசிச் சோற்றை இகழ்ச்சியுடன் நோக்கி மேலைத்தேச உணவைக் கைக்கொள்ளத் தொடங்கினார்கள்.

★ ஏழைக் கிராம மக்களும், நகர்ப்புறத் தொழிலாளியும் அரசினால் வழங்கிய இலவசக் கூப்பன் அரிசியை விற்றுவிட்டுப் பாணைச் சாப்பிட்டார்கள். அரிசியைவிடப் பாண் மலிவாக இருந்ததனால் மிஞ்சும் பணத்தைக் கொண்டு வேறு அத்தியாவசியப் பொருளை வாங்க மிகுதிப் பணத்தைப் பயன்படுத்தினார்கள்.

★ குடும்பத்தில் கணவனும், மனைவியும் வேலைக்குப் போகின்றவர்களாக இருந்தாலும் பாண் அவர்களுக்கு சுலபமாகியது.

★ தவிட்டோடு கூடிய ஊர் அரிசியையும், வரகு, குரக்கன் போன்ற ஏனைய தானியங்களையும் மறந்து கோதுமை மாவில் எம்மவர் நாட்டம் கொள்ள மேற்கண்ட மூன்று அம்சங்களும் காரணிகள் எனலாம்.

நாம் தொடர்ந்தும் பாணையும் சாப்பிட்டு, அரிசியையும் தீட்டி அந்தத் தவிட்டை மிருக உணவுக்கு ஒதுக்கினால் நாம் நிச்சயம் ஒரு நோயாளியான மனித சமூகத்தையும், ஆரோக்கியமான மந்தைகளையும் உருவாக்குவோம்.

அதாவது தீட்டிய கோதுமை மா, நன்றாகத் தீட்டிய அரிசி ஆகியவற்றில் செய்யப்படும் பண்டங்களே நோயாளிச் சமூகத்தின் தாய் தந்தையர் எனலாம்.

**ஆதாரம்:** பி. ரி. டி. சில்வா எழுதிய
"ஹெல்த் அன்ட் டயற்"



# திருநாவுக்கரசு நாயனார் சரித்திரமும் அவருக்குரிய ஐந்துபூத விகிதாசார வரலாற்று முறைகளும்

திருநாவுக்கரசு நாயனார் இளமைப் பருவத்தில் சமண சமயத்தில் இருந்தார். இவர் சமண சமயத்தைக் கைக்கொண்டு வந்த காலத்தில் ஏற்பட்ட சூலை நோயினால் தமக்கையாரின் வேண்டுகோளுக்கிணங்க சைவ மதத்தைத் தழுவலானார். சமண சமயத்தை விட்டு விலகி சைவ சமயத்தைத் தழுவிய காரணத்தினால் இவரது சூலை நோய் நீங்கியது. சமண சமயத்தில் ஏற்பட்ட சூலைநோய் சைவ சமயத்தைத் தழுவியதும் நீங்கியதற்கு முறையான காரணம் ஏதோ இருந்திருக்க வேண்டும். இதற்கு சமயத்தின் திறமை காரணமல்ல. சமண சமயத்தில் உள்ளவர்களது பழக்க வழக்கங்களுக்கும், சைவ சமயத்தில் உள்ளவர்களது பழக்க வழக்கங்களுக்கும் அதிக வித்தியாசம் உண்டு. இதன் காரணமாக சமண சமயத்தில் இருக்கும்போது ஏற்பட்ட சூலை நோய், சைவசமய பழக்கவழக்கம் காரணமாக நீங்கியிருக்க முடியும். சூலை நோய் வெப்பமிகுதி காரணமாக ஏற்படும் ஒரு நோயாகும். சைவ சமயத்தைத் தழுவியதும் அவரது கடமையுணர்வின் வலிமை காரணமாக அவரது ஐந்துபூத விகிதாசாரத்தில் ஒளிப்பூதம் கூடுதலாய் அமைந்ததும் அவ் உஷ்ணம் இவரைத் தாக்கியிருக்க முடியாத காரணத்தினால் அந்நோய் நீங்கிவிட்டது. இங்கே இவரது சரித்திர சம்பந்தமான சிந்தனையை வளர்த்து உண்மையைக் காண முற்படுகிறோம். திருநாவுக்கரசு நாயனார் சைவ சமயத்தைத் தழுவியதும் சமண சமயத்தவர்கள் தங்களது அதிகார வேட்கையினால் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாக இவருக்கு பலவிதமான சித்திரவதைகளைச் செய்ய முற்படுகிறார்கள். முதலாவதாக மிகமிக உஷ்ணம் கூடிய சுண்ணாம்பு அறையில் அடைத்து வைத்துச் சித்திரவதை செய்கிறார்கள். இங்கே நாம் அவதானிப்பது சைவ சமயம் பெரிதா? சமண சமயம் பெரிதா? என்ற கருத்தல்ல.

சமண சமயத்தில் அவர் இருந்த காலத்தில் பொய் சொல்லுதல், கோள் சொல்லுதல், பொறாமைப்படல் போன்ற நடைமுறைகளைக் கைக் கொண்டுள்ளார். ஆனால் சைவ சமயத்திற்கு மாறியதும் சதா நேரமும் இரக்க சிந்தை ஏற்பட்டு, கோயில் வீதியிலுள்ள புற்களை உழவாரத் திருப்பணி மூலம் செப்பனிடல், தனக்குத் தேவையான உணவு வகைகளையும் உடல் உழைப்பில் வருந்தி உழைத்தல், கோயிற் சுற்றாடலை எவ்வளவு புனிதமாக வைத்திருந்தாரோ அதேவிதமாக தனது உள்ளத்தையும் ஞான அறிவு மேலோங்கக் கூடிய விதமாக எவ்வுயிரும் தன்னுயிர் போல் இரங்கி சமய நெறிப்பாட்டில் ஈடுபட்டுள்ளார். சுண்ணாம்பு அறையின் கடும் சூடானது, இவரது உள்ளத்திலுள்ள ஞானஒளி வளர்ச்சி காரணமாக சூட்டைக் காட்டமாட்டாது. ஆகவே இவருக்கு சுண்ணாம்பு அறை ஒரு தண்ணீர்த் தடாகம் போல் இருந்தது என்று குறிப்பிட்டது முற்றிலும் சரியானது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கலாம்.

அடுத்து, யானையின் முன்னால் இவரைக் கொண்டு வந்து நிறுத்தி யானையின் கொடுஞ் செயலுக்கு ஆளாக்குகிறார்கள். இங்கே நாம் எமது சிந்தனையை இன்னும் வளர விடுகிறோம். யானையின் உள்ளத்திலே அசுத்தமான காற்று இருக்க முடியாது. இங்கே சைவ சமயத்தைத் தழுவியபின் திருநாவுக்கரசு நாயனாரது உள்ளத்திலும் சமய மாறுபாடு காரணமாக நற்சிந்தனைகள் ஏற்பட்டு நல்லெண்ணமே இருந்தது. யானையினதும் திருநாவுக்கரசு நாயனாரினதும் உள்ளத்தில் ஒரே தன்மையுடைய சுத்தமான காற்றே நிறைந்திருந்தபடியால் அந்த யானை, திருநாவுக்கரசு நாயனாரைத் தாக்கவில்லை. அதற்குப் பதிலாக ஒத்த மனநிலையுள்ள காரணத்தினால் அவரை வலம் வந்து வணங்கிவிட்டுச் சென்றது. இங்கே நாங்கள் இன்னும் சிந்தனையை வளர விடுகிறோம்.

எச் சமயத்தவராயிருப்பினும் அச் சமயத்தவர்கள் செய்யும் கொடுமைகள் கட்டுக்கடங்காதவை. திருநாவுக்கரசு நாயனாருக்குச் செய்த கொடுமைகள் எல்லாம் விலகியதைக் கண்ட சமண சமயத்தவர்கள் கொடுங்கோண்மை காரணமாக அவரைக் கல்லுடன் கட்டிக் கடலினுள் வீசுகிறார்கள். இங்கேயும் நாம் எமது சிந்தனையை வளர விட்டு உண்மையைக் கண்டுபிடிக்க விரும்புகிறோம். சமண சமயத்தவர்களுக்கு அவரது கொடுங்கோன்மை காரணமாக ஐந்து பூத விகிதாசாரத்தில் நீர்ப்பற்றுக் கூடுதலாகவே அமைந்திருக்கும். ஆனால் எமது திருநாவுக்கரசு நாயனாருக்கு சமயக் கொள்கைகள் மாறுபட்டதன் காரணமாக ஒளிப்பூதம் கூடுதலாய் அமைந்துள்ளதைக் காணுகிறோம். நீர்ப்பூதம் கூடியவர்கள் கல்லைக் கடலினுள் எறிந்ததும் திருநாவுக்கரசு நாயனாரது ஒளிப்பூதம் கூடுதல் காரணமாக அந்நீர் வற்றி நிலத்தில் போட்ட கல் மாதிரி இருந்தது. ஆகவேதான் இச்செயல் திருநாவுக்கரசு நாயனாரை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என்பதை பூரணமாக நிரூபிக்கிறோம்.



மாணிக்கவாசக சுவாமிகளது சரித்திரமும், அவர் ஞான ஒளியை அடைந்த வரலாறும் தொடரும்.

> இயற்கையின் இரகசியங்களை அறிய முற்பட்ட மனிதன் காற்று, நீர், பூமி, நெருப்பு ஆகியவற்றைத் தனக்கு அடிமையாக்கி விட்டான். இயற்கையைக் கட்டுப்படுத்தப் பழகிய மனிதன் தன்னைக் கட்டுப்படுத்தப் பழகவில்லை. இதுதான் இன்றைய மனிதனின் பரிதாப நிலை. அன்பு இருவகை. ஒன்று இயற்கையான அன்பு. மற்றது தெய்வீக அன்பு. பிரதியுபகாரம் கருதுவது சாதாரண அன்பு. விளைவு கருதாமல் மற்றவர்களுக்கு வழங்குவது தெய்வீக அன்பு (நெஞ்சங்களுக்கு, மனித மனங்களுக்கு, ஆன்மாக்களுக்கு இடையே விளைவது தெய்வீக அன்பு) பேச்சினில் அன்பு - உண்மை. செயலில் அன்பு - தருமம், சிந்தையில் அன்பு - சாந்தி. உலகில் மனிதகுலம் என்ற ஒரே சாதியும், அன்பு மதம் என்ற ஒரே சமயமும் தான் உண்டு என்பதை இளைய சமுதாயம் உணர வேண்டும். சுயநலம் அற்ற அன்புணர்ச்சியை இளையோரிடத்தே வளர்க்க வேண்டும்.
>
> — *சத்யசாயிபாபா* —

உ—

# நெறிதவறாத அறத்தின் மேன்மையும்; நேர்முகமாக உணர்த்துகின்ற அர்த்தங்களும் !

எமது தாபனத்தின் ''விநாயகர் தரும நிதியம்'' என்னும் பெயர் வைத்த காரணத்தை பங்குனி மாத இதழில் விளக்கியிருந்தோம். அடுத்தபடியாக அறநெறிப் பரீட்சையை நடாத்துவதற்குரிய தாபனமாக ''அறநெறி விஞ்ஞான மன்றம்'' என்னும் பெயரில் ஓர் நிலையத்தை உருவாக்கியுள்ளோம். இப்பிரஞ்சம் உருவாகுவதற்கு முதற் காரணம் அறநெறியே. அந்த அறநெறியில் உருவான நாம் காலஞ் செல்லச்செல்ல அந்நெறிகளின் உண்மைப் பொருளை அறியாமல் சுயநலம் காரணமாக தவறான மார்க்கங்களைக் கடைப்பிடித்து எமது ஐந்துபூத விகிதாசாரம் கீழ் நிலையடைவதற்குரிய செயல்களைச் செய்து வருகிறோம்.

''முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி'' என்று சரித்திரம் கூறுகிறது. ஒரு செடியின் படரும் தன்மைக்கு உதவுவதற்காக தனது பெறுமதி மிக்க தேரை அச்செடிக்கு விட்டுச் செல்வதென்றால் எவருமே செய்யக்கூடிய காரியமல்ல. ஆனால் இவ்விஷயத்தை எமது சிந்தனையிலிட்டு ஆராயும்போது அவனது ஐந்துபூத விகிதாசாரத்தின் ஒளிப் பூதத் தன்மையே அவ்வாறான ஒரு இரக்க செயலுக்கு அவனை ஆளாக்கியது. ஞான ஒளிப்பூதம் கூடிய ஒருவன் இரக்க சிந்தனை மிகுதியால் தனது கஷ்டத்தை எதிர் நோக்காது மற்றைய உயிர்களின் கஷ்டத்தையே எதிர் நோக்குவான்.

அறநெறி என்ற கருத்தைச் சிந்தித்து ஆராயும்போது அதன் பெருமைகளை உணரக்கூடியதாயுள்ளது. பஞ்சபாண்டவர்கள் ஐவரும் அவர்களது தமையனான கர்ணனும் ஏன் அறநெறியில் வாழ்ந்தார்கள் என்பதை ஆரா



யும்போது சிலபல விளக்கங்கள் தென்படுகின்றன. துரியோதனனாதியோர் நூற்றியொருவரையும் பஞ்சபாண்டவர்கள் ஐந்து பேரும் தர்ம நிலையில் வென்றதற்குக் காரணம் அறநெறியே. பஞ்சபாண்டவர்களது தமையனான கர்ணன் தாயினது இளம் பராயத்தில் பிறந்த தன்மையினால் பெட்டியில் அடைக்கப்பெற்று ஆற்றில் விடப்பட்டதும் நூற்றியொருவராகிய துரியோதனர்கள் எடுத்து வளர்க்கிறார்கள். அவ்வாறு வளர்ந்தும் துரியோதனன் பகுதியினருக்குள்ள குணம் கர்ணனுக்கு ஏற்படவில்லை. கர்ணன் துரியோதனனாகியோரிடமிருந்து கிடைக்கும் வருமானம் முழுவதையும் அறத்துக்கே செலவழிக்கிறான். எவர் கேட்டாலும் ''இல்லை'' என்னும் வார்த்தை இல்லாமலே அறம் செய்துள்ளான். ஆனால் இவனை வளர்த்த துரியோதனன் ஆகியோரிடம் இவ்விதமான அறநெறிப் பண்பாடு இருக்கவில்லை. இவற்றிற்கு ஏதோ ஒரு அடிப்படைக் காரணம் இருந்தேயாக வேண்டும். பஞ்ச பாண்டவர்களதும், கர்ணனதும் தாயான குந்திதேவி சூரியனை நோக்கித் தவமிருந்து சூரியனிடமிருந்து பெற்ற ஆறு மாத்திரைகள் காரணமாகவே கர்ணனும், பஞ்ச பாண்டவர்களான ஐவருமாக ஆறு பேர் பிறந்துள்ளார்கள். சூரியனான ஒளிப் பொருளிடமிருந்து பெற்ற ஆறு மாத்திரைகளிலிருந்து பெற்ற தன்மையினால் இவர்களுக்கமைந்த ஐந்துபூத விகிதாசாரத்தில் ஒளிப்பூதம் கூடுதலாய் அமைந்துள்ளது. ஆகவே அறநெறி வளர்வதற்கு ஒளிப்பூதம் கூடுதல் மிகமிக முக்கியமானது என்பதை உணரக்கூடியதாயுள்ளது.

இக் காரணங்களினாலே எமது அறநெறி விஞ்ஞான மன்றத்திற்கு முதற் சொல்லாக ''அறநெறி'' என இட்டுள்ளோம். ஆரம்ப காலத்தில் உருவான புல்லினம் தண்ணீருள்ள கரைப் பகுதிகளில் ஓரளவான காற்றும், ஓரளவான ஒளியும் சேர்ந்தே ஆரம்ப புல்லினமான அறுகு உருவானது. உஷ்ணம் கூடியதும் நிலத்திலுள்ள நீர்ப்பற்றுக் குறைவதால் நீர்ப்பற்றை நாடி நாடி வேரைச் செலுத்தி சிறிது காலம் கூடுதலாக வாழ எத்தனிக்கிறது. இந்நேரத்தில் மழை ஏற்பட்டு விட்டால் இன்னும் சிறிது காலம் கூட வாழுகிறது. வெய்யில் கூடி மழைநீர் காய்ந்ததும்

தாக்குப் பிடிக்க முடியாத நிலை ஏற்பட வேரில் ஈரம் இல்லாததால் காய்ந்து இறந்துவிடுகிறது. இவ்வாறு காலஞ் செல்லச் செல்ல கூடிய சூட்டையும் தாங்கவேண்டிய காரணமாக வேரை கூடுதலான ஆழத்திற்குப் பாய்ச்சி கூடுதலான காலம் வாழ முயற்சிக்கிறது. இப்படியாக வாழ்ந்து வரும் காலத்தில் தனது கடமையைச் சரிவரச் செவ்வனே செய்யவேண்டிய யோசனையைக் கொண்டு தனது வேரைக் கிழங்காக்குகிறது. கிழங்காக்கினால் உஷ்ணம் வந்து காய்வு ஏற்பட்டு நீர்ப்பற்று அற்றுப் போனாலும் எவ்வளவு காலம் சென்றாலும் அக்கிழங்கிலிருந்து தனது சந்ததியை விருத்தி செய்கிறது. இவ்வாறு செய்யும்போது ஆரம்பத்திலுள்ள அறுகுக்குரிய ஐந்துபூத விகிதாசாரத்தைவிட கிழங்காக்கியதின் பின்னுள்ள ஐந்துபூத விகிதாசார அளவு வித்தியாசமானதாகவே அமைந்திருக்கும். இவ்வாறே காலஞ் செல்லச் செல்ல ஒவ்வொரு தாவர இனமும் மாறி மாறி வேரை நிலத்தின்கீழ் கூடிய தூரம் செலுத்தி நீர்ப்பூத விகிதாசாரத்தைக் கூடுதலாக எடுத்து பெரும் விருட்சங்களாயும், பெரும் மரங்களாயும், பெருந் தென்னை, பனைகளாயும் வளர்ந்துள்ளன. இங்கே நாம் அவதானிப்பது என்னவென்றால் ஆரம்ப புல்லினமான அறுகுக்குரிய நீர்ப்பூத விகிதாசாரத்திற்கும், பல்லாயிரம் வருடங்களின்பின் உருவான பனை மரத்திற்குரிய ஐந்துபூத விகிதாசாரத்திற்கும் மிகுதியான வித்தியாசங்கள் உண்டு. ஆரம்ப புல்லினமான அறுகினம் சிறிய இனமாக இருந்தபடியால் வேரை அதிகம் நிலத்தின்கீழ் பாய்ச்ச முடியவில்லை. இக் காரணங்களினாலே அவற்றின் ஆயுளும் குறைவானதே. ஆனால் பல்லாயிரம் வருடங்கள் சென்றதன்பின் உருவான பனைமரமானது நீர் இருக்கும் இடத்தை நோக்கி எண்ணிலடங்கா வேர்களைப் பாய்ச்சி எவ்வளவு காலம் மழை இல்லாது போனாலும் தாக்குப்பிடித்து வளருகிறது. இங்கே நாம் அவதானிக்க வேண்டிய விஷயங்கள் பல உண்டு. பனை மரத்திற்கு எவரும் தண்ணீர் ஊற்றுவது கிடையாது. தனது வேர்களை நேரடியாகத் தண்ணீர் பாங்குள்ள இடத்திற்கு கூடிய கெதியில் செலுத்தி நிலம், நீர், காற்று, சூடு, ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்களில் நிலத்தையும், நீரையும் கூடிய விகிதாசாரமாய் எடுத்து எவரும் நினைத்துப்



பார்க்க முடியாத வைரமுள்ள உடலாக்கி சொல்ல முடியாத காலம் மக்களுக்குப் பிரயோசனங்களை ஈந்து ஈற்றில் இறந்த தனது உடலையும் சொல்ல முடியாத காலம் பாவிக்கக் கூடியதாக செயற்படுத்தி தனது கடமையைப் பூரணமாய்ச் செய்து வேறு பிறவிக்குப் போய்ச் சேருகிறது. ஆரம்ப பனம் கன்றுக்கும் மிக முது பருவத்திலுள்ள பனைக்கும் அமைந்த ஐந்துபூத விகிதாசாரம் மிகமிக வேறுபட்டதாகவே இருக்கும். ஆகவே இச்செயல் அறநெறி காரணமாகவே உருவானது என்பதை மறுப்பதற்கில்லை. இவ் அறநெறி காரணமாகவே காலஞ் செல்லச்செல்ல இரண்டறிவுள்ள உயிரினமாகவும், மூன்றறிவுள்ள உயிரினமாகவும், நான்கறிவுள்ள உயிரினமாகவும், ஐந்தறிவுள்ள உயிரினமாகவும் பரிணமித்து ஈற்றில் பகுத்தறிவுள்ள ஆறறிவு மனித இனம் தோன்றலாயிற்று. இம் மனித இனம் தோன்றுவதற்கு அறநெறியே மூலகாரணம் என்பதை தெளிவாக விளங்கக் கூடியதாயுள்ளது.

அடுத்த சொல்லான '' விஞ்ஞானம் '' என வைத்ததற்குரிய காரணத்தை சிறிது ஆராய்வோம். விஞ்ஞான கண்டுபிடிப்புகள் எல்லாம் உண்மை வழியில் செயல்பெற்றாலே அவற்றைக் கண்டுபிடிக்க முடியும். ஞான அறிவு மிகுந்தவனுக்கே விஞ்ஞான அறிவும் ஏற்பட முடியும். ஆகவே '' விஞ்ஞானம '' என்னும் சொல்லை நடுநாயகமாக இட்டுள்ளோம்.

இன்றைய நிலையில் விஞ்ஞானம் ஆக்கத்தைவிட அழிவுப் பாதையிலேயே கூடுதலாகச் செயற்படுகிறது. விஞ்ஞானத்தின் மூலமாக நோய்கள் மாற்றுவதற்குரிய மருந்துகள் கண்டுபிடிப்புகள், வானொலி, விண்ணைச் சுற்றுதல் போன்ற எவ்வளவோ நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன. ஆனால் ஓர் நாட்டை அழிப்பதற்கும், ஓர் சமூகத்தை அழிப்பதற்குமான பெருங் கொடுமைகளுக்கும் இவ் விஞ்ஞானத்தைப் பாவிக்கிறார்கள். ஆனால் நாம் இங்கு அறநெறி விஞ்ஞானம் என்று ஆக்கப் பாதைக்கான விஞ்ஞானத்தையே குறிப்பிட்டுள்ளோம்.

கடைசிச் சொல்லான '' மன்றம் '' என்பதைச் சிறிது ஆராய்வோம். '' மன்றம் '' என்பது நீதி மன்றம். வழக்காடு மன்றம், கருத்துரை வழங்கும் மன்றம் எனப் பலவாறான மன்றங்கள் உண்டு. மன்றம் என்று சொல்லும் போது ஒரு பொதுப் பணிக்குரிய தாபனத்தையே கருதும். ஆகவே இப்பரீட்சை சம்பந்தமான செயற்பாட்டைக் கொள்வதற்காக '' அறநெறி விஞ்ஞான மன்றம் '' என்னும் பெயரை வைத்துள்ளோம்.

அறநெறி விஞ்ஞான மன்றம் என்ற சொல்லில் மன்றம் என்பது அறநெறி விஞ்ஞானத்தின் மூலம் எதிர்காலத்தில் கிடைக்கும் ஒரு அறிவு வளர்ச்சிப் பாதையாகும். ஆகவே இந்த '' அறநெறி விஞ்ஞான மன்றம் '' என்னும் மூன்று சொற்களும் எமது ஆன்ம ஆரம்பம் முதல் இறுதி வரையான பிறப்பற்ற நிலையைக் குறித்து நிற்பதை எவ்வித சந்தேகமுமின்றி நிரூபித்துள்ளோம்.

அறநெறி எண்ணம் உருவாவதற்கு மூன்று எண் குறிப்பிடும் காற்றே அவ்வெண்ணத்தை உருவாக்குகிறது. அவ்வெண்ணத்தின் மூலமாக வாயிலிருந்து வரும் சொல் விஞ்ஞான ரீதியாய் அமைந்திருக்கும். அவ்வெண்ணத்தின் மூலமாக உண்டாகும் செயல் மன்றத்தின் மூலமே செயற்பெறும். '' அறநெறி விஞ்ஞான மன்றம் '' என்னும் சொல்லின் மூன்று சொற்களும் அறம், பொருள், இன்பம் என்னும் முக்கருத்துக்களை விளக்கி நிற்கின்றன. அடுத்து '' அறநெறி விஞ்ஞான மன்றம் '' என்னும் சொல்லிலுள்ள அறநெறி என்பது கடமையெனவும், விஞ்ஞானம் என்பது கண்ணியமெனவும், மன்றம் என்பது கட்டுப்பாடெனவும் பொருள்படும்.

[தொடரும்

மரணத்தின்பின் மனைவி, மக்கள் வசதியாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் சில ஒழுங்குகளை முன்கூட்டியே செய்து வைக்கிறோம். இறந்தபின் ஆன்மாவின் எதிர்காலம் பற்றி நாம் சிந்திப்பதில்லை.



உ

# உண்மைவழிச் செயற்பாட்டில் கருங்கல்லும் கதை பேசியது!

எமது சைவசமய வரலாறுகள் மக்களின் உடல் நலத்தையும், சுகாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. நாயன்மார்கள், கண்ணப்பர், திருநீலகண்டர், எறிபத்தநாயனார் முதலியோர் உடற்கஷ்டம் பாராது தமது கடமையை செவ்வனே நிறைவேற்றியுள்ள காரணத்தினால் ஞான ஒளியில் இரண்டறக் கலந்துள்ளார்கள். அவர்களது ஒவ்வொரு செயலும் ஐந்தபூத விகிதாசாரத்தில் ஒளிப்பூதத்தை மிகுதியாக்கி வந்த காரணத்தினால்தான் இறுதியில் ஞான ஒளியை அடைந்தார்கள். இறைச்சியைக் கருங்கல் ஆசனத்தில் இருக்கும் இறைவனுக்குப் படைக்கும் கண்ணப்பர் இறைவனின் கண்ணிலிருந்து இரத்தம் சொரிவதைக் கண்டதும் தமது கண்ணைப் பிடுங்கி அதில் ஒட்டுகிறார். அடுத்த கண்ணிலிருந்தும் இரத்தம் சிந்தியதும் அவரது கால்ப் பெருவிரலை அக்கண்ணில் அடையாளமாக வைத்துக்கொண்டு. அடுத்த கண்ணையும் பிடுங்கி ஒட்டுகிறார். இது மற்றைய எவராலும் செய்யக்கூடிய காரியமல்ல. அவரது ஆன்ம அலையிலுள்ள ஐந்தபூத விகிதாசாரத்தில் ஒளிப்பூதம் கூடுதலாக இருந்த காரணத்தினால் இரக்க சிந்தனை ஏற்பட்டு அவ்வாறு செய்துள்ளார். இவற்றை நாம் கூறும்போது இதைக் கண்டவர் யார் என சந்தேகம் ஏற்படுவது இயற்கையே. —வளரும்

உ

## உண்மையே கடவுள்

[ [illegible] ]

கள்ள[illegible] கள்ளனைத் தேடு[illegible]!
மதுக் கி[illegible]ளம [illegible]
குடியினால் [illegible]ல் பு[illegible]
[illegible]மான [illegible]மண்ணாகும்!

'' மகன் தந்தை[illegible]றும் [illegible]றி [illegible]வன் தந்தை
என்னோற்[illegible]கொல் [illegible]ம் [illegible]சால் ''
'' ஈன்ற பொ[illegible]ல் [illegible] தன்மகனை
சான்றோ[illegible]கேட்ட [illegible]

— பரமானந்த[illegible]ரம வேண்டுகோள்

உ

# பொது நிறுவனங்களின் பாராட்டுக் கடிதங்கள்

தங்கள் விநாயகர் தரும நிதியம் தமிழீழத்தில் ஆற்றி வரும் சேவைகள் அளப்பரியது. தாங்களும் தங்கள் நிதியமும் சேவை நோக்கோடு எடுத்துக்கொண்ட விடயங்களான கல்வி வளர்ச்சிப்பணி, ஊனமுற்றோர் உதவிப்பணி, தரும நேயப்பணி என்பன வறுமைப்பட்ட மக்களை வளம்படுத்தும் திட்டங்களே. இந்தத் திட்டத்தின்கீழ் எமது கிராமத்திலுள்ள ஊனமுற்றோரையும் தெரிவு செய்து நிவாரணம் வழங்கி வருகின்றீர்கள். வறுமைப்பட்ட மக்களுக்கும் மாணவர்களுக்கும் சேவை செய்யும் தாங்களும் தங்கள் விநாயகர் தரும நிதியமும் மேன்மேலும் வளர்ச்சியடைந்து ஆக்கப்பணிகளுக்கு ஓர் உந்துசக்தியாகத் திகழவேண்டுமென எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

11-8-1991 கிராம அபிவிருத்திச் சங்கம். இன்பருட்டி

புகழுக்காகவும் உள்ளார்ந்த சுயநல நோக்குடனும் தொண்டர் சேவை செய்வதாகக் கூறிச் செயற்படும் மாந்தர்களை உடைய இப்புவியிலே தன்நலம் சிறிதும் எதுவுமின்றி பிறர் பயன் பெறும் ஒரே நோக்குடன் பாடுபட்டுவரும் தங்களைப் போன்ற உயரிய சிந்தனையாளரின் சமூகத்தொண்டு இச் சமுதாயத்தின் உடல் உள விருத்திக்குப் பெரிதும் உதவுமென்ற நம்பிக்கையுடன் தங்களது உன்னத எண்ணம் நிறைவேற இறைவனைப் பிரார்த்தித்து எமது படிப்பக வாசகர்கள் படித்துப் பயன் பெறும் பொருட்டு தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட அரிய பெரிய கருத்துக்களைக் கொண்ட இப் புத்தகங்களை நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறோம்.

நாமகள் சனசமூக நிலையம்,
12-11-1992 கரவெட்டி கிழக்கு கரவெட்டி.

தங்களின் விநாயகர் தரும நிதியம் ஆத்மீகத் துறையிலும் அறிவியற் துறையிலும் சமூகத்துக்கு ஆற்றிவரும் தொண்டு இக்காலகட்டத்தில் மிகமிக வேண்டியதொன்றும், மகத்தான தொண்டுமாகும். தங்கள் இந்த விநாயகர் தரும நிதியத்தின் தொண்டு சேவை என்பன எதுவித தடங்கல் இடையூறுகள் இன்றி விரிந்தளவிற் செயற்பட்டு நிலைபெற எல்லாம் வல்ல கற்பக விநாயகப்பெருமான் நற்கருணை புரியவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

9-12-91. கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபை, உடுப்பிட்டி



தங்களின் 12-வது வெளியீட்டினைப் பார்வையிட்டபின் தான் தாங்கள் இப்படிப்பட்ட ஒழுங்கான கட்டமைப்பும், நிர்வாகத் திறனும், ஆன்மீக அறிவும் உடையவர் என்பதனையும் எல்லாவற்றிற்கும் மேலாக இப்பிறவி எடுத்த பயனை உணர்ந்து பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்கிறீர்கள் என அறிந்து தங்களுக்கு தலை தாழ்த்தி வணங்குகிறேன். தங்களை நேரில் கண்டபோது தாங்கள் பல வேலைகளை ஒரே நேரத்தில் எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பாராது பிறவி எடுத்த பயனுக்காக ஆற்றுவதைக் கண்டேன். தங்களுக்கு விக்கினேஸ்வரப் பெருமான் நீண்ட ஆயுளையும், தனது அருளினையும் வாரிவாரி வழங்குவார் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

8-7-91 அல்வாய் அம்பாள் அ. த. க. வித்தியாலயம், அல்வாய்

நிலைதடுமாறிச் சீரழிந்து அல்லற்படும் சமுதாயத்தில் உண்மைப் பொருளின் தத்துவத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டது மட்டுமல்லாமல் அடுத்தவர்களும் அறியக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தி வருகின்ற தங்கள் ஈடு இணையற்ற பணியை எமது சமுதாயத்தினர் ஏற்றுக்கொள்வார்களேயானால் நாம் எல்லோரும் புண்ணியம் செய்தவர்களாவோம். தங்கள் பணிகள் தொடர எமது மன்றத்தின் சார்பில் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகிறோம்.

31-1-92 தமிழ்மொழி மாணவர் மன்றம், தும்பளை தெற்கு.

தாங்கள் எமது பகுதியில் வாழும் ஊனமுற்றவர்கள், பராமரிப்பு அற்றோருக்கு அளித்து வருகின்ற நன்கொடை அளப்பரியது. அரசு என்ற நிறுவனம் செய்ய முடியாத கைங்கரியத்தை தனி மனிதராக தாங்கள் அளித்துவரும் இவ்வுதவிக்கு அளவே இல்லை. ''செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றல் அரிது' என்ற பொய்யாமொழிப் புலவரின் இலட்சியத்துக்கு ஏற்றவராக உங்கள் கடப்பாடு அமைந்துள்ளது. எமது பகுதியில் உள்ளவர்களுக்கு மட்டுமன்றி அயற் கிராமத்திலுள்ளவர்களுக்கும் அளித்துவரும் இவ்வுதவி மகத்தான சமூகப் பணியாகும். எங்கள் நிலையத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

8-8-91 பாரதிதாசன் ச. ச. நி அல்வாய் தெற்கு, அல்வாய்

## எமது வெளியீடுகளை பின்வரும் விலாசங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அன்னை மருந்தக மருந்துச்சாலை — பருத்தித்துறை

அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவனம் — கண்டிறோட், கைதடி

அபிராமி மருந்தகம் — நீர்வேலி

பூபாலசிங்கம் புத்தகசாலை — யாழ்ப்பாணம்

ஸ்ரீலங்கா புத்தகசாலை — யாழ்ப்பாணம்

எஸ். கே. சாமி அன் கோ — நெல்லியடி

தனலக்குமி புத்தகசாலை — சுன்னாகம்

முத்தமிழ் மன்ற நூலகம் — சுன்னாகம்

சூரியா பார்மஸி — புத்தூர்

★

---

இச் சஞ்சிகை புலோலி மேற்கு, பருத்தித்துறை விநாயகர் தரும நிதியத்தினருக்காக சி. சிவகுமாரன் அவர்களால் உடுப்பிட்டி ஸ்ரீ வாணி அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.